**<u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>**

**அனுப்புநர்**

**திருமதி. சு. லீலாவதி உண்ணி,**
**மேயர் (பொறுப்பு)**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**<u>ந.க.எண் : 3753 / 2014 / எம்சி. 8 நாள் : 04.06.2014</u>**

**<u>அய்யா /அம்மா,</u>**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் **11.06.2014** புதன்கிழமை காலை **10.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் (பொறுப்பு) அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**மேயர் (பொறுப்பு)**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜுன் 2014

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - சீத்தாலட்சுமி நகர்நல மையம் - பல்நோக்குச் சிகிச்சை மையமாக தரம் உயர்த்துதல் - சிறப்பு பல்சிகிச்சை மையம் அமைத்தல் - மருத்துவ உபகரணங்கள் வாங்குதல் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனையுடன் மூன்றாண்டு காலம் இணைந்து சிகிச்சை மேற்கொள்ளுதல் - புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 2 | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 11 நகர்நல மையங்களில் மகப்பேறு தொடர்பான மருத்துவ சேவைகள் மேற்கொள்ளுதல் - அல்ட்ரா கவுண்ட் ஸ்கேன் இயந்திரங்கள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - சீத்தாலட்சுமி நகர்நல மையம் - பல்நோக்குச் சிகிச்சை மையமாக தரம் உயர்த்துதல் - புதியதாக பிறந்த குழந்தைகளுக்கு கண் சம்பந்தமான குறைபாடுகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு சங்கரா கண் சிகிச்சை நிறுவனத்தாருடன் மூன்றாண்டு காலம் இணைந்து சிகிச்சை மேற்கொள்ளுதல் - புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - சீத்தாலட்சுமி நகர்நல மையம் - பல்நோக்குச் சிகிச்சை மையமாக தரம் உயர்த்துதல் - சிறப்பு எண்டாஸ்கோபி சிக்சை மையம் அமைத்தல் - மருத்துவ உபகரணங்கள் வாங்குதல் மற்றும் ELCE Medical Foundation-உடன் மூன்றாண்டு காலம் இணைந்து சிகிச்சை மேற்கொள்ளுதல் - புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக - |
| 5 | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - சீத்தாலட்சுமி நகர்நல மையம் - பல்நோக்குச் சிகிச்சை மையமாக தரம் உயர்த்துதல் - பச்சிளம் குழந்தை பராமரிப்பு சிகிச்சை மையம் அமைத்தல் - மருத்துவ உபகரணங்கள் வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி.ர. ஜானகி, இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் –சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. எ. வெள்ளைத்தாய், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பொள்ளாச்சி நகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 8 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி நிர்வாகப் பொறியாளர் பணியிடத்தினை பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 01.04.2014 முதல் 31.03.2015 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 10 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – ஒரு நபர் குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட திருத்திய ஊதியவிகிதத்தினை துப்புரவு பணியாளர்கள் தங்களுக்கும் வழங்குமாறு கோரியது – அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 11 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பின் கீழ் குடிநீர் தலைமையிடம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திட்டத்திலுள்ள நீருந்து நிலையங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் வெள்ளலூர் குப்பை கிடங்கில் சுற்றுசுவர், தார் சாலை, மின் விளக்கு மற்றும் கேமரா அமைத்தல் - ஒருங்கிணைந்த நகர்புர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (IUDM 2014–15 ) மானிய நிதி வேண்டுதல்– மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 12 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் முன்புறம் தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான திருச்சி சாலையில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல் - மருத்துவமனையின் சுற்றுச்சுவருக்கு வெளிப்புறமாக வடபுற படிக்கட்டுகள் அமையும் வண்ணம் வரைபடங்களை திருத்தி அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண்.46 கணபதி பழைய சத்தி சாலை பள்ளத்தின் பக்கவாட்டில் உள்ள குடியிருப்புகளுக்கு JNNURM திட்டத்தின்கீழ் மாற்று வீடுகள் வழங்க குடிசை மாற்று வாரியத்திற்கு பரிந்துரை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 14 | வடக்கு மண்டலம் - துடியலூர் அல்லது உருமாண்டம்பாளையம் ஆகிய ஏதேனும் ஒரு பகுதியில் இரயில் நிறுத்தம் அமைப்பது – மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| 15 | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் சாலையோரங்களில் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தப்படுவதை குறைக்க வாகனம் நிறுத்தும் கட்டணம் வசூல் செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| 16 | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு முழுமையாக அமைக்கப்பட்டு உள்ளதை உறுதி செய்த பின்னர் சொத்து வரி, குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் நடைமுறையை அமல்படுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 17 | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதி க.ச.எண்.659ல் உள்ள 2 ஏக்கர் நிலத்தினை புதிய பேருந்து நிலையம் அமைக்க வெள்ளலூர் பேரூராட்சிக்கு வழங்க அரசிற்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் 20 ஏக்கர் நிலத்தினை குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்க அரசுக்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 19 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டல அலுவலக வளாகத்தில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுதல் பணி - விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டது - ரூ. 585.00 லட்சம் மதிப்பீடு - மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - அரசின் நிர்வாக அனுமதி பெறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | Jnnurm - கோயம்புத்தூர் மாநகராட்சி - இணைக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து குடிநீர் திட்டங்களையும் ஒருங்கிணைத்து 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் செய்தல் - விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து தமிழ்நாடு குடிநீர் மேலாண்மை நிறுவனம், சென்னை வசம் ஒப்படை செய்தல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 21 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுப் பணித்துறைக்கு சொந்தமான குறிச்சி குளத்தில் மாநகராட்சி மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் - கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய அரசினரைக் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் 75 தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியிடத்திற்கு அரசின் அனுமதி பெறப்படும்வரை ஒப்பந்த அடிப்படையில் 30 தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டது – ஒப்பந்த காலம் நிறைவடைந்தது – ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்தல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 23 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.72 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 3 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யப்பட்டது-பாஸ்போர்ட் அலுவலகம் கோவை-18 அலுவலகத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை மறு பரீசிலனை செய்ய கோரியது – மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 46 – மாமரத் தோட்டம் பகுதியில் கட்டப்பட்ட கட்டிடம் - பொதுப்பணித்துறையால் நிர்ணயம் செய்யப்படும் வாடகை அடிப்படையில் நுகர்வோர் அங்காடி மற்றும் நுலகத்திற்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 25 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - குறிச்சி, குனியமுத்துார் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - மின்தடை மற்றும் குழாய் உடைப்பு காரணமாக குறைவான அளவில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருதல் - சிறுவாணி திட்டத்திலிருந்து காந்தி பூங்கா நீர் தேக்கத் தொட்டிக்கு குடிநீர் கொணரும் 450 மிமீ வார்ப்பு இரும்பு குழாயில் பூஜ்ஜியம் முனை பகுதியிலிருந்து இணைப்பு ஏற்படுத்தி ஆறுமுக கவுண்டனூர் வரை 300 மிமீ வார்ப்பு இரும்பு குழாய் அமைத்து 3 மில்லியன் லிட்டர் வரை கூடுதலாக குடிநீர் வழங்குதல் - மதிப்பீடு ரூ.74.50 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - குறிச்சி, குனியமுத்துார் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - மின்தடை மற்றும் குழாய் உடைப்பு காரணமாக குறைவான அளவில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருதல் - NTP வீதியிலிருந்து கோவைப்புதூர் 3ம் நிலை கீழ் நிலை நீர் தேக்க தொட்டி வரை 300 மிமீ அளவிலான வார்ப்பு இரும்பு குழாய் அமைத்து 3 மில்லியன் லிட்டர் வரை கூடுதலாக குடிநீர் வழங்குதல் - மதிப்பீடு ரூ.75.00 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 27 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - குறிச்சி, குனியமுத்துார் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - மின்தடை மற்றும் குழாய் உடைப்பு காரணமாக குறைவான அளவில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருதல் - ஆறுமுக கவுணடனூர் முதல் சுண்டக்காமுத்தூர் வரை 300 மிமீ வார்ப்பு இரும்பு குழாய் அமைத்து 3 மில்லியன் லிட்டர் வரை கூடுதலாக குடிநீர் வழங்குதல் - மதிப்பீடு ரூ.75.00 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 28 | குடிநீர் விநியோக பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – 70 விபரப் பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் ஒரு வலையமைப்பு (Network) பொறியாளர், ஒரு உதவி வலையமைப்பு (Network) பொறியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் – மதிப்பீடு ரூ.75.00 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 87 – திருமூர்த்தி நகர், திருவள்ளுவர் நகர் மற்றும் காந்தி நகர் பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை திரும்ப அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 71.40 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 30 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - திருவள்ளுவர் நகர் மற்றும் காந்தி நகர் பகுதிகளில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால்களை திரும்ப அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 74.80 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 31 | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட நகர் நல மையங்களில் காலியாக உள்ள 2 பெண் மருத்துவ அலுவலர் பணியிடங்களும் - மருந்தகங்களில் 7 மருத்துவ அலுவலர் பணியிடங்களும், 7 மருந்தாளுநர் (அலோபதி – 5, ஆயுர்வேத -2) பணியிடங்களும் Outsourcing மூலம் நிரப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |

| | |
|---|---|
| 32 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.23 வரிவிதிப்பு எண்.2320044-ற்கு D.B. ரோடு வணிக வளாக கடை எண்.6 திருமதி.நீலம்நந்தா என்பவர் பெயரிலிருந்து திரு.T.பாலாஜி பெயருக்கு பெயர்மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 33 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.84 உக்கடம் புதிய மீன் மார்கெட் கட்டண கழிப்பிடம் மற்றும் இரண்டு சக்கரவாகனம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஒப்படை செய்யப்பட்டது – நடத்த இயலாது என குத்தகைதாரரால் தெரிவிக்கப்பட்டது – வைப்புத்தொகை பறிமுதல் செய்தல் மற்றும் மேற்படி இனத்தை ஏலத்திற்கு கொண்டு வருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 34 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண். 54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வணிக வளாகத்தில் மாற்று திறனாளிகளுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளில் கடை எண்.4 மற்றும் 5-க்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமம் ரத்து செய்தல் – மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 35 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.51 சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடைகளை உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 36 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.71 ரேஸ்கோர்ஸ் நவீன கட்டண கழிப்பிடத்தை ஏல இனங்களிலிருந்து நீக்கம் செய்தல் - பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்த அனுமதித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 37 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.83 ராஜவீதி மருந்தகவளாகம் அருகிலுள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஒப்படை செய்யப்பட்டது - நடத்த இயலாது என குத்தகைதாரரால் தெரிவிக்கப்பட்டது – வைப்புத்தொகை பறிமுதல் செய்தல் மற்றும் மேற்படி இனத்தை ஏலத்திற்கு கொண்டு வருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 38 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் பி.3 காவல் நிலையம் அருகில் உள்ள நவீன கட்டணகழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஒப்படை செய்யப்பட்டது - நடத்த இயலாது என குத்தகைதாரரால் தெரிவிக்கப்பட்டது – வைப்புத்தொகை பறிமுதல் செய்தல் மற்றும் மேற்படி இனத்தை ஏலத்திற்கு கொண்டு வருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 39 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.50 ராஜுரோடு மேற்கு தரைதளம் கடை எண்.2-யை உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 40 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரைதளம் கடை எண்.5-யை உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 41 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரைதளம் கடை எண்.7-யை உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 42 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.72 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அலுவலகத்தை 31.05.2014ல் அன்று காலி செய்ததை தொடர்ந்து அலுவலகத்தை பொது ஏலத்தில் சேர்த்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 43 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.83 மத்திய மண்டலத்திற்குட்பட்ட தியாகி குமரன் மார்க்கெட் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண்.P.186-க்கு வாடகை செலுத்தாத காரணத்தால் 05.02.2014- அன்று மாநகராட்சியால் பூட்டப்பட்டது. - வைப்புத்தொகை பறிமுதல் செய்தல் மற்றும் மேற்படி இனத்தை ஏலத்திற்கு கொண்டு வருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 44 | வருவாய் பிரிவு - – மத்திய மண்டலம் - வார்டு எண்.54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் திரு.எஸ்.ராஜேஸ்குமார் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – உரிமம் புதுப்பிக்காததால் உரிமத்தை ரத்து செய்து வைப்புத்தொகை பறிமுதல் செய்தல் மற்றும் மேற்படி இனத்தை ஏலத்திற்கு கொண்டு வருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 45 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம்- வரவினங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளுக்கு மத்திய கலால் துறைக்கு செலத்தப்பட வேண்டிய சேவை வரியினை செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 46 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் வணிகவளாக கடைகள் 2014-17-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.06.2014-ல் நடைபெற்றது - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 47 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் வணிகவளாக கடைகள் 2014-17-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.03.2014-ல் நடைபெற்றது - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 48 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 22 – அண்ணா மார்க்கெட் கழிப்பிடம் - பொதுமின்ஏலம் விடுதல் - வைப்புத்தொகை உள்ளிட்ட இதர தொகைகளை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 49 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண். 10 மற்றும் 23 மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள கென்வின் நடுநிலைப் பள்ளி மற்றும் நவீன பேருந்து நிலையம் இரண்டாவது தளத்தில் உள்ள கட்டிடத்தை அரசு அலுவலகங்கள் செயல்பட வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்தல் - வணக்கத்திற்குரிய மேயரின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 50 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 40 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 51 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 28 - சரவணம்பட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு ஐந்தாவது முறையாக மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 52 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 28 - சரவணம்பட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு ஆறாவது முறையாக மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 53 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 31 - சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 54 | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – வ.உ.சி. உயிரியல் பூங்காவை தனியார் மூலம் தத்தெடுத்து பராமரித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 55 | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டும் திட்டம் (IUDM) – திடக்கழிவு மேலாண்மை – சிப்பம் 2 – 14 எண்ணிக்கையிலான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் லாரிகள் கொள்முதல் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மதிப்பீட்டுத் தொகையிட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை பொது நிதியிலிருந்து ஈடு செய்தல் - மாமன்ற அனமதி கோருதுல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.

**(குறள் - 637)**

**விளக்கம்**

செயலாற்றும் முறைகளை அறிந்திருந்தாலும் உலகியல் பண்பாடுகளையும், இயற்கைச் சூழல்களையும் நன்றாக ஆய்ந்து அறிந்து, அவற்றிற்கு ஏற்றவாறு செயல்பட வேண்டும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**தீர்மானம் எண் -1**

இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வா் பெண்ணினத்திற்கு பெருமை சேர்த்த அம்மா அவா்களின் முத்தான மூன்றாண்டு கால ஆட்சிக்கு தலைவணங்கி வணக்கத்துடன் கூடிய நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்து இந்த மாமன்றத்தில் பாராட்டும் வகையில் இந்த சிறப்பு தீா்மானம் சுகாதார நிலைக்குழுத் தலைவா் திருமதி. தாமரைச்செல்வி அவா்களால் முன்மொழியப்பட்டு 65 –வது வாா்டு மாமன்ற உறுப்பினா் திரு. ரா. வெண்தாமரைபாலு அவா்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீா்மானம் எண் 1 நாள் 11.06.2014**

நிறைவேற்றப்பட்டது.

---

**தீா்மானம் -2**

கோயம்புத்தூா் மாநகராட்சியை சோ்ந்த குளங்களை பேணி பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் நமது மாநகராட்சி நிா்வாகத்தையும், தன்னாா்வத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்கள், சுற்றுச்சூழல் அமைப்புகள், பொதுப்பணித்துறை அனைவரையும் மனதார பாராட்டி அவா்களின் சேவையை ஊக்குவித்து இந்த மாமன்றத்தில் பாராட்டும் வகையில் சிறப்பு தீா்மானம் சுகாதார நிலைக்குழுத் தலைவா் திருமதி. தாமரைச்செல்வி அவா்களால் முன்மொழியப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவா் திரு.ஆா். பிரபாகரன் அவா்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீா்மானம் எண் 2 நாள் 11.06.2014**

நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் 1**

பொருள்:- கோயம்புத்தூா் மாநகராட்சி சீத்தாலட்சுமி நகா்நல மையம் - பல்நோக்குச் சிகிச்சை மையமாக தரம் உயா்த்துதல் - சிறப்பு பல்சிகிச்சை மையம் அமைத்தல் - தொடா்பாக.

--------

2014-15-ம் ஆண்டின் மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கையில் சீத்தாலட்சுமி நகா்நல மையத்தினை பல்நோக்குச் சிகிச்சை மையமாகத் தரம் உயா்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் பல்சிகிச்சை மையம் அமைத்து சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு இதற்கென மருத்துவ தொழில் நுட்பக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அறிவுரைகள் பெறப்பட்டது.

மருத்துவ தொழில் நுட்பக்குழுவின் பரிந்துரைப்படி பல் சிகிச்சை மையம் துவங்க கீழ்கண்ட மருத்துவ வசதிகள் தேவைப்படுகின்றன.

அ. மருத்துவ உபகரணங்கள்

மேற்படி பல் சிகிச்சை மையத்திற்கு மருத்துவ தொழில் நுட்பக்குழு பரிந்துரை செய்த மருத்துவ உபகரணங்களை வாங்கி வழங்கலாம். இதற்காக உள்ளூா் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது இதில் குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் இப்பொருட்களுக்கான உத்தேச மொத்த விலை ரூ. 5,50,000/- ஆகும்.

ஆ. பல்சிகிச்சை மருத்துவா்கள் மற்றும் செவிலியா்கள்

மாநகராட்சியில் பல் சிகிச்சை மருத்துவா் இல்லாத காரணத்தால் தனியாா் பங்களிப்புடன் பல்சிகிச்சை மையத்தில் சிகிச்சை மேற்கொள்ளலாம். இதற்காக விருப்பமுள்ள தனியாா் நிறுவனங்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டதில் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை இலவசமாக பல்சிகிச்சையை மேற்கொள்ள முன்வந்துள்ளனா். எனவே இம்மருத்துவமனையுடன் மூன்றாண்டு காலம் இணைந்து மேற்படி சிகிச்சை பணியை மேற்கொள்ள நிபந்தனைகளுடன் கூடிய புரிந்துணா்வு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

அ'' மற்றும் ''ஆ''விற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 8016 /2013/எம்.இ.1

**மாநகர மன்ற தீா்மானம் எண் 3 நாள் 11.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர் நல மையங்களில் மகப்பேறு தொடர்பான மருத்துவ சேவைகளை மேம்படுத்துவது – அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் வைத்தல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 11 மகப்பேறு நகர் நல மையங்களில் அல்ட்ரா சவுண்ட ஸ்கேன் மருத்துவ வசதி செய்து பொதுமக்கள் பயன்பெறும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் வரவு செலவு திட்ட உரையில் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவ சேவைபணிகளை 11 மகப்பேறு நகர்நல மையங்களில் தொடர்ந்து சிறந்த முறையில் செயல்படுத்த மருத்துவ தொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் இயந்திரங்களை 11 நகர்நல மையத்திற்கு வாங்கி வழங்க ரூ. 54,89,000/- செலவினமாகும். எனவே மேற்படி செலவினத்தில் ஒப்பந்தப்புள்ளிகோரி இவ்வியந்திரங்களை வாங்கி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 8016 /2013/எம்.இ.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 4 நாள் 11.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி சீத்தாலட்சுமி நகர்நல மையம் - பல்நோக்கு சிகிச்சை மையமாக தரம் உயர்த்துதல் - பிறந்த குழந்தைகளுக்கு கண் சிகிச்சை செய்தல் - தொடர்பாக.

-------

2014-15-ம் ஆண்டின் மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கையில் சீத்தாலட்சுமி நகர்நல மையத்தினை பல்நோக்குச் சிகிச்சை மையமாகத் தரம் உயர்த்தவும் தற்போது புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு கண்களில் ஏற்படும் பார்வை குறைபாடுகள், கண்திரை, கண்புரை மற்றும் பிற குறைபாடுகளை உடனுக்குடன் ஆரம்பநிலையில் கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளிக்கவும் மற்றும் மேல் சிகிச்சைக்கு பரிந்துரைக்கவும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேற்படி மையத்தில் பிறந்த குழந்தைகளுக்கு கண்பரிசோதனை செய்யும் சிகிச்சை மையம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் மேற்படி சிகிச்சை மையம் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதற்கென மருத்துவ தொழில் நுட்பக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அறிவுரைகள் பெறப்பட்டது.

இதற்காக விருப்பமுள்ள தனியார் நிறுவனங்களிடம் கருத்துகள் பெறப்பட்டதில் சங்கரா கண் சிகிச்சை நிறுவனம் இலவசமாக பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் கண்பார்வை குறைபாடுகள், கண்திரை, கண்புரை மற்றும் பிற குறைபாடுகளை கண்டறிந்து அதற்காக உடனுக்குடன் சிகிச்சையளிக்கவும் மற்றும் மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்யவும் முன்வந்துள்ளனர். இச்சிகிச்சைக்கான மருத்துவ உபகரணங்களை தாங்களே கொண்டுவந்து சிகிச்சையை மேற்கொள்ளவும் முன்வந்துள்ளனர். இதனால் மாநகராட்சிக்கு செலவினம் ஏதும் இல்லை.

எனவே மூன்று ஆண்டுகள் இந்நிறுவனத்தாருடன் இணைந்து மேற்படி சிகிச்சை பணியை மேற்கொள்ள நிபந்தனைகளுடன் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 8016 /2013/எம்.இ.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 5 நாள் 11.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி சீத்தாலட்சுமி நகர்நல மையம் - பல்நோக்குச் சிகிச்சை மையமாக தரம் உயர்த்துதல் - சிறப்பு எண்டோஸ்கோபி சிகிச்சை மையம் அமைத்தல் - தொடர்பாக.

-------

2014-15-ம் ஆண்டின் மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கையில் சீத்தாலட்சுமி நகர்நல மையத்தினை பல்நோக்குச் சிகிச்சை மையமாகத் தரம் உயர்த்தவும் தற்போது பொதுமக்கள் அதிகமான மனஉளைச்சல்களாலும் பல்வேறு உணவுப்பழக்கவழக்கத்தாலும் உணவுக்குழாய் மற்றும் குடல் சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்படுவதால் பொது மக்களின் நலன் கருதி மேற்படி மையத்தில் எண்டோஸ்கோபி சிகிச்சை மையம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் எண்டோஸ்கோபி சிகிச்சை மையம் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதற்கென மருத்துவ தொழில் நுட்பக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அறிவுரைகள் பெறப்பட்டது.

அ) மாநகராட்சியில் எண்டோஸ்கோப்பி சிகிச்சை மருத்துவர் இல்லாத காரணத்தால் தனியார் பங்களிப்புடன் எண்டோஸ்கோப்பி சிகிச்சை மையத்தில் சிகிச்சை மேற்கொள்ளலாம். இதற்காக விருப்பமுள்ள தனியார் நிறுவனங்களிடம் கருத்துகள் பெறப்பட்டதில் ELCE Medical Foundation என்ற நிறுவனத்தார் எண்டோஸ்கோப்பி சிகிச்சையை மேற்கொள்ள முன் வந்துள்ளனர். மேலும் இச்சிகிச்சைக்கு வரும்போது அதற்கான பணியாளர்களின் போக்குவரத்து மற்றும் உணவுகளுக்கான செலவுகளை மட்டும் வழங்கக்கோரியுள்ளனர். வாரத்திற்கு ஒரு முறை இச்சிகிச்சையை இவர்கள் பொது மக்களுக்கு மேற்கொள்ள இருப்பதால் இவர்களுக்கு ஒரு முறைக்கு ரூ. 5000/- என்ற அடிப்படையில் செலவு தொகையாக வழங்கலாம். மேலும் மூன்று ஆண்டுகள் இந்நிறுவனத்தாருடன் இணைந்து மேற்படி சிகிச்சை பணியை மேற்கொள்ள நிபந்தனைகளுடன் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

ஆ) மேலும் மாநகராட்சி மூலம் இச்சிகிச்சைக்கான மருத்துவ உபகரணங்கள் வாங்க மூன்று உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் உபகரணங்களுக்கான உத்தேச செலவினம் கணக்கிடப்பட்டது. இதற்கான செலவினம் ரூ. 13,70,000/- ஆகும்.

''அ'' மற்றும் ''ஆ''விற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 8016 /2013/எம்.இ.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 6 நாள் 11.06.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி சீத்தாலட்சுமி நகர்நல மையம் - பல்நோக்குச் சிகிச்சை மையமாக தரம் உயர்த்துதல் - பச்சிளம் குழந்தை பராமரிப்பு சிகிச்சை மையம் அமைத்தல் - தொடர்பாக.

-------

2014-15-ம் ஆண்டின் மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கையில் சீத்தாலட்சுமி நகர்நல மையத்தினை பல்நோக்குச் சிகிச்சை மையமாகத் தரம் உயர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறந்த குழந்தைகளில் சில குழந்தைகள் எடைகுறைவாக பிறக்கின்றன. குறிப்பிட்ட தேதிக்குமுன்னரே பிறக்கும் சில குழந்தைகளுக்கு மூச்சுத்திணறல், உடல் வெப்பம் குறைதல், பால் உட்கொள்ளுதல் பிரச்சனை மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு ஏற்படும் மஞ்சக்காமாலை போன்ற பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அச்சமயத்தில் இக்குழந்தைகளுக்கு தனிக்கவனம் செலுத்தி பராமரிப்பு செய்யும் பொருட்டு சீதாலட்சுமி நகர்நல மையத்தில் பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையம் அமைக்க திட்டமிடப்பட்டு இதற்கென மருத்துவ தொழில் நுட்பக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அறிவுரைகள் பெறப்பட்டது.

மேற்படி பச்சிளம் குழந்தை பராமரிப்பு செய்யும் மையத்திற்குத் தேவையான உபகரணங்களை மருத்துவ தொழில் நுட்பக்குழு பரிந்துரை செய்துள்ளனர். எனவே மருத்துவ தொழில்நுட்பக்குழு பரிந்துரை செய்த மருத்துவ உபகரணங்களை ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கி வழங்கலாம். இதற்காக மூன்று உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் இப்பொருட்களுக்கான உத்தேச மொத்த விலை ரூ. 9,70,000/- ஆகும். எனவே மேற்படி செலவினத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி உபகரணங்கள் வாங்கி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 8016 /2013/எம்.இ.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 7 நாள் 11.06.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. ர.ஜானகி, இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், கோயம்புத்தூர் மாநகராட்சி– சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிப்பது – தொடர்பாக.

****

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்தில் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சராக பணிபுரியும் திருமதி. ர.ஜானகி அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த 7 ஆண்டு காலமாக கடமை தவறாது இம்மாநகராட்சியில் பணியாற்றி வருவதாகவும் தனக்கு 23.8.2009ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது என்றும் தனது கணவர் சென்னையில் பணியாற்றி வருவதாகவும் தான் தன்னுடைய 4 வயது குழந்தை மற்றும் தன் அம்மாவுடன் கோயம்புத்தூரில் வசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தனது குழந்தை அவள் அப்பாவின் ஞாபகத்தினால் ஏக்கம் ஏற்பட்டு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் ஆகிறது என்றும் தனது கணவர் சென்னையில் வசித்து வருவதாலும் தனது குழந்தையின் உடல் நிலையை கருத்தில் கொண்டு தனக்கு சென்னை மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி. ர.ஜானகி, இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சரை சென்னை மாநகராட்சியில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதலில் செல்ல மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை
ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.688/2014/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 8 நாள் 11.06.2014**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

**பொருள் :** பணியமைப்பு–கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி.எ. வெள்ளைத்தாய், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், கோயம்புத்தூர் மாநகராட்சி– பொள்ளாச்சி நகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் கோருவது – மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் தொடர்பாக.

****

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்தில் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சராக பணிபுரியும் திருமதி. எ. வெள்ளைத்தாய் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த 7 ஆண்டுகளாக பணியாற்றி வருவதாகவும், தனது இரண்டு குழந்தைகளையும் வயதான மாமனார் மற்றும் மாமியார் கவனித்து வந்ததாகவும், சமீபத்தில் இருவரும் காலமாகிவிட்டதால் தனது குழந்தைகளையும் குடும்பத்தையும் கவனித்து கொண்டு தினந்தோறும் பொள்ளாச்சியிலிருந்து பணிக்கு குறித்த நேரத்திற்கு வருவதற்கும் செல்வதற்கும் சிரமமாக உள்ளதாலும் தனக்கு பொள்ளாச்சி நகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே திருமதி. எ.வெள்ளைத்தாய், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சரை பொள்ளாச்சி நகராட்சிக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதலில் செல்ல மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை
ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.10958/2013/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 9 நாள் 11.06.2014**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

பொருள் : பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – உதவி நிர்வாகப் பொறியாளர் பணியிடத்தினை பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்தல் – தொடர்பாக.

பார்வை : அரசாணை (ப) எண். 55, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள் 13.02.2014.

-----

பார்வையில் காணும் அரசாணையில், காலியாக உள்ள 4 உதவி செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தினை பூர்த்தி செய்ய உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1996ம் வருடத்திய மாநகராட்சி பணியமைப்பு விதிகளில் இப்பணியிடத்திற்கு தேவையான தகுதிகள் (Qualifications) கீழ்கண்டவாறு.

- By Promotion from the holders of the post of Assistant Engineer / Junior Engineer.
- Must have worked as Assistant Engineer / Junior Engineer for not less than one year in the Engineering Department of the Corporation Main Office and for a period of not less than three years in the Ward Offices.

ஆணையாளர் அவர்களின் குறிப்பாணை ந.க.எண்.1324/2013/எம்.சி.1 நாள் 05.04.2013ல் வெளியிடப்பட்ட இளம் மற்றும் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கான உத்தேச பணிமூப்புப் பட்டியலுக்கு ஆட்சேபணை தெரிவித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு எண். 11501/2013ன்படி இடைக்கால தடையாணை பெறப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதால், தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996 ஆம் ஆண்டு பணியமைப்பு விதிகளின்படி, உதவி/இளம் பொறியாளர் பணியிடத்திற்கு இறுதி பணிமூப்பு பட்டியல் தயார் செய்ய இயலவில்லை.

எனவே ந.க.எண்.1324/2013/எம்.சி.1 நாள் 05.04.2013ல் வெளியிடப்பட்ட தற்காலிக பணிமூப்பு பட்டியலின்படி, கீழ்கண்ட அலுவலர்கள் மூத்தோர் வரிசையில் உள்ளனர்.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | திரு. பி. பிரபாகரன்<br>இளம் பொறியாளர் | 13.05.1988 | |
| 2. | திருமதி. பி. ராஜேஸ்வரி<br>இளம் பொறியாளர் | 13.05.1988 | 30.09.2013ல் பணி ஓய்வு |
| 3. | திரு. எம். கதிர்வேல்<br>இளம் பொறியாளர் | 10.07.1990 | 28.02.2014ல் பணி ஓய்வு |
| 4. | திரு. கே. மனோகரன்<br>உதவிப் பொறியாளர் | 14.04.1997 | அரசாணை (ப) எண். 217, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந5) துறை நாள் 03.05.2010ன்படி, சேலம் மாநகராட்சியிலேயே நிரந்தரமாக பணியமர்த்தப்பட்டுள்ளதால் இவரது பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | திரு. எஸ். ரவிச்சந்திரன்<br>உதவிப் பொறியாளர் | 14.04.1997 | |
| 6. | திருமதி. டி. புவனேஸ்வரி<br>இளம் பொறியாளர் | 14.04.1997 | |
| 7. | திரு. எம். சரவணன்<br>இளம் பொறியாளர் | 14.04.1997 | |
| 8. | கே. ஜெயலட்சுமி<br>உதவிப் பொறியாளர் | 14.04.1997 | |

எனவே மேற்கண்ட தற்காலிக பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் மூத்தோர் வரிசையில் உள்ள வ.எண்.1, 5, 6 மற்றும் 7ல் உள்ளோருக்கு தகுதியின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கலாம்.

மேலும் தற்போது இம்மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளராகப் பணிபுரிந்து வரும் திரு. வீரராகவன், அவர்கள் 31.07.2014ல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறவுள்ளார். எனவே அப்பணியிடத்திற்கு பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் வ.எண். 8ல் உள்ளவரை பதவி உயர்வு பட்டியலில் சேர்க்கலாம். பதவி உயர்விற்கு அரசின் உறுதியாக்கம் பெற்றவுடன் ஊதியம் நிர்ணயம் செய்யலாம்.

மேற்கண்டவாறு நான்கு உதவி செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்கவும், ஒரு உதவி செயற்பொறியாளரை பதவி உயர்வு பட்டியலில் சேர்க்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 1324/2013/எம்சி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 10 நாள் 11.06.2014**

பொருளிலுள்ள அட்டவணைக்கு அடுத்துவரும் இரண்டாம் பத்தியை நீக்கம் செய்தும் மூன்றாம் பத்தியில் குறிப்பிட்டுள்ள " ஒரு உதவி செயற்பொறியாளரை பதவி உயர்வு பட்டியலில் சேர்க்கவும் " என்ற வார்த்தைகளை நீக்கியும் அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

**பொருள்:** கோயம்புத்துார் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் **01.04.2014** முதல் **31.03.2015** முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் – தொடர்பாக

* * * * * * *

கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் **10** டெக்ஸ்கோ ஓட்டுநர்களுக்கு மாநகராட்சி மன்ற தீர்மான எண்.**19** நாள்.**25.04.2013**–ன்படி நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.**11,001/–** (அனைத்து வரிகளும் சேர்த்து) என நிர்ணயம் செய்யப்பட்டு **01.04.2013** முதல் **31.03.3014** முடிய பணிபுரிய உத்திரவிடப்பட்டது. இந்த ஒப்பந்த காலம் **31.03.2014** உடன் முடிவடைகிறது. இதில் தற்போது **8** ஓட்டுநர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். அதற்கான விபரப்பட்டியல் பின்வருமாறு:

| வ. எண். | ஓட்டுநர் பெயர் | வாகனம் எண். | வாகனம் வகை | மண்டலம் |
|---|---|---|---|---|
| 1. | டி. சிவராஜ் | TN 37A 0737 | Open Body Lorry | மத்தியம் |
| 2. | எஸ்.வி. செல்லத்துரை | TN 37 S 3282 | Single Bin Dumper Placer | மத்தியம் |
| 3. | வி.எஸ். நடராஜ் | TN 37 Y 0207 | Single Bin Dumper Placer | மத்தியம் |
| 4. | டி.சுகுமார் சிங் | TAB 9091 | Water Tanker Lorry | கிழக்கு |
| 5. | எம். சுகுமாறன் | TDI 4174 | Open Body Lorry | மேற்கு(முடுசு) |
| 6. | பி. பவுலோஸ் | TN 37 E 6697 | Open Body Lorry | வடக்கு |
| 7. | எஸ். சந்திரன் | TN 37 Q 0904 | Open Body Lorry | மத்தியம் |
| 8. | எம். சிவசக்திவேல் | TN 37 BB 0631 | Open Body Lorry | மேற்கு |

டெக்ஸ்கோ நிறுவனத்தினர் தங்களது கடிதத்தில் மேற்படி ஒப்பந்தத்தை **01.04.2014** முதல் **31.03.2015** முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து தருமாறும், அதில் ஓட்டுநர் ஒருவருக்கு **8** மணி நேர பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.**14,213/–** (சேவைக்கட்டணம் **12%** மற்றும் அதற்குரிய சேவைவரி **12.36%** உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறும் கேட்டுள்ளனர்.

எனவே, மாதாந்திர ஊதியத்தில் **8** டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு **01.04.2014** முதல் **31.03.2015** முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தமுறையில் பணிபுரிய ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும், இதற்காகும் செலவினம் ரூ.**13,64,424/–**க்கு ஒப்புதல் வேண்டியும், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் ஏப்ரல் **2014** மற்றும் மே **2014** ஆகிய இரண்டு மாதங்களுக்கு பழைய ஊதிய விகிதத்தில் அனுமதித்ததற்கு பின்னேற்பு வேண்டியும் மாமன்றத்திற்குப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7480/2010/எம்சி7

**மாநகர மன்ற தீர்மானம் எண் 11 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – ஒரு நபர் குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட திருத்திய ஊதியவிகிதத்தினை துப்புரவு பணியாளர்கள் தங்களுக்கும் வழங்குமாறு கோரியது – அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை:** வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் நாளில் பெற்ற மனு நாள்.25.02.2014

-----

பார்வையில் காணும் மனுவில் இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை பணியாளர்களாகப் பணிபுரிந்து வரும் கீழ்க்கண்ட பணியாளர்கள் தொழில் நுட்பமல்லாத பணியாளர்களாக (unskilled Worker) பணியமர்த்தப்பட்டனர் என்றும், ஒரு நபர் குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்படி திருத்திய ஊதிய நிர்ணயம் செய்து தரக்கோரி விண்ணப்பம் செய்த பொழுது பாதாள சாக்கடைப் பணியாளராகக் கருத முடியாது எனவும் துப்புரவு பணியாளராக வகைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துவிட்டனர் எனவும், தங்களுக்கு ஒரு நபர் குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட திருத்திய ஊதியம் வழங்குமாறு கேட்டுள்ளனர்.

| வ.எண். | பெயர் | பணிபுரிந்துவரும் இடம் |
|---|---|---|
| 1 | திரு.டி.கிருஷ்ணன் | பொறியியல் பிரிவு எண்.1, மேற்கு மண்டலம் |
| 2 | திரு.வி.மகேந்திரன் | பொறியியல் பிரிவு எண்.1 , மேற்கு மண்டலம் |
| 3 | திரு.ஆர்.வீரமோகன் | வ.ஊ.சி.பூங்கா, மத்திய மண்டலம் |
| 4 | திரு.பி.நடராஜன் | வ.ஊ.சி.பூங்கா,மத்திய மண்டலம் |
| 5 | திரு.எஸ்.பரமசிவம் | டி.பி.ரோடு, மத்திய மண்டலம் |
| 6 | திரு.ஆர்.ராஜு | டி.பி.ரோடு, மத்திய மண்டலம் |
| 7 | திரு.எஸ்.ரவி | டி.பி.ரோடு, மத்திய மண்டலம் |
| 8 | திரு.எஸ்.காளியப்பன் | டி.பி.ரோடு, மத்திய மண்டலம் |
| 9 | திரு.எஸ்.துரைசாமி | டி.பி.ரோடு, மத்திய மண்டலம் |
| 10 | திரு.பி.வெள்ளிங்கிரி | டி.பி.ரோடு, மத்திய மண்டலம் |
| 11 | திரு.கே.ஆறுச்சாமி | டி.பி.ரோடு, மத்திய மண்டலம் |
| 12 | திரு.டி.முருகேசன் | டி.பி.ரோடு, மத்திய மண்டலம் |

மேற்படி பணியாளர்களின் பதவி விபரத்தினை சரிபார்க்கும் பொருட்டு அவர்களது பணிப்பதிவேடுகளை சரிபார்க்கப்பட்டதில் அனைவரும் பதிலி துப்புரவு பணியாளராக பணிபுரிந்து துப்புரவு பணியாளர்களாக பணி நிரந்தரம் செய்யப்பட்டது தெரியவந்தது. மேலும் பொறியியல் பிரிவில் பாதாள சாக்கடை பணி மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தினால் மேற்காண் பணியாளர்கள் பாதாள சாக்கடை பணிகளை பணிமாற்று அடிப்படையில் கவனித்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் துப்புரவு பணியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள். இவர்கள் துப்புரவு பணியாளர் பணியிடத்தில் ரூ.4800–10000+1300 த.ஊ என்ற ஊதிய விகிதம் பெற்று வருகின்றனர். அரசாணை எண்.338 நிதி (ஊதியக்குழு) துறை நாள்.26.08.2010ன்படி ஒருநபர் குழுவின் மூலம் தேர்ச்சி திறனற்ற பணியாளர்களுக்கு (USW) பரிந்துரைக்கப்பட்ட திருத்திய ஊதிய விகிதமான ரூ.5200–20200+1900த.ஊ–ஐ தங்களுக்கும் வழங்குமாறு கோரியுள்ளனர்.

மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்திய ஊதிய விகிதம், தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப தொகுதி பணியாளர்களுக்கு மட்டுமே அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கு மண்டலத்தில் பணிபுரிந்துவரும் திரு.கிருஷ்ணன் மற்றும் திரு.வி.மகேந்திரன் ஆகிய இரு பணியாளர்களுக்கு ஒரு நபர் குழு பரிந்துரையின்படி திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்வது தொடர்பாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை மாநகராட்சித் தணிக்கை, கோயம்புத்தூர் அவர்களிடம் தெளிவுரை கோரப்பட்டது. இது தொடர்பாக பெறப்பட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை மாநகராட்சித் தணிக்கை, கோயம்புத்தூர் அவர்களின் 17.07.2013ம் தேதிய கடிதத்தில், திரு.கிருஷ்ணன் மற்றும் திரு.வி.மகேந்திரன் துப்புரவுப் பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டு பணி மாற்று அடிப்படையில் பாதாள சாக்கடை பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டதாகவும், இப்பணியாளர்கள் தொழில் நுட்ப தொகுதி பணியாளர்கள் மற்றும் செயல் திறனற்ற பிரிவிற்குட்பட்ட பணியாளர்களின்கீழ் வகுக்கப்படாததால் மேற்காணும் அரசாணை மேற்காண் பணியாளர்களுக்குப் பொருந்தாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி 12 பணியாளர்களும் பதிலி துப்புரவு பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டு துப்புரவு பணியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்யப்பட்டு பணிமாற்று அடிப்படையில் பொறியியல் பிரிவில் பாதாள சாக்கடைப் பணிகளை செய்து வருகின்றனர். மேலும் பொறியியல் பிரிவில் பாதாள சாக்கடை பணி மேற்கொள்ள இம்மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி பாதாள சாக்கடைப் பணியாளர் பணியிடம் ஏதும் அனுமதிக்கப்படாததாலும் மேற்படி பணியாளர்கள் பணிமாற்று அடிப்படையில் பாதாள சாக்கடைப் பணி மேற்கொள்ளப் பணிக்கப்பட்டு கடந்த 1997ம் வருடம் முதல் பணிபுரிந்து வருவதாலும், தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடத்திற்கான திருத்திய ஊதிய விகிதத்தினை தங்களுக்கும் வழங்கக் கோரும் இப்பணியாளர்களது கோரிக்கையினை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 12269/2013/எம்சி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 12 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 11

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பின் கீழ் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது – குடிநீர் தலைமையிடம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திட்டத்திலுள்ள நீரூந்து நிலையங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளவும், வெள்ளலூர் குப்பை கிடங்கில் சுற்றுசுவர், தார் சாலை, மின் விளக்கு மற்றும் கேமரா அமைக்கவும் ஒருங்கிணைந்த நகர்புர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (IUDM 2014–15 ) மானிய நிதி வேண்டுதல் – மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது – தொடர்பாக.

பார்வை : நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்.14964/2014/இ1 நாள்.16.05.2014.

---

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பின் கீழ் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட கூட்டுக் குடிநீர்திட்டத்தில், இடைக்கால அளவின்படி (Intermediate stage) 7.60 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள மக்கள் தொகை வளர்ச்சியினால் திட்டமிடப்பட்ட அளவைவிட கூடுதலாக குடிநீர் தேவைப்படுகிறது. போதுமான அளவு குடிநீர் பொது மக்களுக்கு வழங்க இயலாமல் குடிநீர் பற்றாக்குறை நிலவுகிறது.

எனவே, பார்வையில் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதத்தின்படி குடிநீர் மேம்பாட்டு பணி, வெள்ளலூர் குப்பை கிடங்கிற்கு சுற்று சுவர் கட்டுதல், தார் சாலை அமைத்தல் மின் விளக்கு மற்றும் கேமரா அமைத்தல் போன்ற பணிகளுக்கு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்ட பணி | பணி விபரம் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூபாய் லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் திட்டம் | ஆழியார் கூட்டு குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் | 2481.00 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது |
| 2 | குடிநீர் திட்டம் | குறிச்சி குனியமுத்தூர் பகுதிகளில் கூடுதலாக மேல்நிலை தொட்டிகள், பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் அமைத்தல் | 3000.00 | தமிழ்நாடு குடிநீர் முதலீட்டுக்கழகம் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது |
| 3 | திடக்கழிவு மேலாண்மை | வெள்ளலூர் குப்பை கிடங்கிற்கு சுற்று சுவர் அமைத்தல் | 350.00 | மாநகராட்சியால் பணி மேற்கொள்ளப்பட உள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | திடக்கழிவு மேலாண்மை | வெள்ளலூர் குப்பை கிடங்கை கண்காணிப்பதற்கு கேமரா பொருத்துதல் | 40.00 | மாநகராட்சியால் பணி மேற்கொள்ளப்பட உள்ளது |
| 5 | திடக்கழிவு மேலாண்மை | வெள்ளலூர் குப்பை கிடங்கிக்குள் தார் சாலை அமைத்தல் | 200.00 | மாநகராட்சியால் பணி மேற்கொள்ளப்பட உள்ளது |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | வெள்ளலூர் குப்பை கிடங்கிக்குள் மின் விளக்கு அமைத்தல் | 30.00 | மாநகராட்சியால் பணி மேற்கொள்ளப்பட உள்ளது |
| | | மொத்தம் | 6101.00 | |

எனவே, மொத்த உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6101.00 லட்சத்தினை ஒருங்கிணைந்த நகர்புர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (IUDM 2014–15 ) மானிய நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.3352/2014/ப.வ.(எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 13 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திக்குட்பட்ட அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலின் இடையூரின்றி பாதுகாப்புடன் சாலையினை கடக்கும் வகையில் அரசு மருத்துவமனை அருகில் தேசிய நெடுஞ்சாலை துறையினருக்கு சொந்தமான திருச்சி சாலையில் ரூ.72.60 லட்சம் செலவில் நடைபாதை மேம்பாலம் அமைக்க மாமன்ற தீர்மான எண் 269 நாள் 14.11.2013 ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டது.

சம்மந்தபட்ட பாலத்தின் வடபுற படிக்கட்டுகள் மருத்துவமனையின் சுற்றுச் சுவருக்கு உட்புறம் சுமார் 100 சதுரடி நிலப்பரப்பில் அமைக்கப்பட வேண்டியுள்ளதால் ஆட்சேபனையின்மை சான்று கோரி கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர், தமது 16.4.2014 ஆம் தேதிய கடிதத்தில் நடைபாதை மேம்பாலத்தின் வடபுற படிக்கட்டுகள் அமைய உள்ள இடத்தில் புதிய கட்டிடங்கள் கட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும், மருத்துவமனைக்கு நோயாளிகளை எடுத்து வரும் அவசர ஊர்திகள் மேற்படி இடத்தில் வந்து செல்ல போதுமான இடவசதி தேவை என்பதாலும் ஆட்சேபனையின்மை சான்று வழங்க இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சுற்றுச்சுவருக்கு வெளிபுறமாகவே வடபுற படிக்கட்டுகள் அமையும்வண்ணம் வரைபடங்களை திருத்தி அமைத்து நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.11041/2013/எம்டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 14 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் வார்டு எண்.46 கணபதி பழைய சத்தி சாலை பள்ளத்தின் பக்கவாட்டில் உள்ள குடியிருப்புகளுக்கு JNNURM திட்டத்தின்கீழ் மாற்று வீடுகள் வழங்க அனுமதி கோருதல் - தொடர்பாக.

**************

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.46 கணபதி பகுதியில் சத்தி சாலையின் பள்ளத்தின் ஒரு பகுதியில் 78 குடும்பங்கள் வசித்து வருவதாகவும், இப்பகுதி பள்ளத்தின் பக்கவாட்டில் உள்ளதால் மழைக் காலங்களில் வீடுகளில் தண்ணீர் புகுந்து விடுவதால் வீடுகள் அனைத்தும் அபாயகரமான நிலையில் உள்ளது என்றும், இவ்வீடுகளை JNNURM திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இதனால் இவ்விடத்தினை சாலை விரிவாக்கம் செய்து பஸ் நிறுத்தம் நிறுவவும், போக்குவரத்து நெரிசலை வெகுவாக குறைக்க இயலும் என்றும் வடக்கு மண்டலத் தலைவர் அவர்கள் 27.05.2014-ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

வார்டு எண்.46-க்குட்பட்ட கணபதி, பழைய சத்தி சாலையில் பள்ளத்தின் பக்கவாட்டில் 78 குடியிருப்புகள் உள்ளன. மேற்படி, வீடுகள் பள்ளத்தின் பக்கவாட்டில் உள்ளதாலும் மழைக் காலங்களில் வீடுகளில் மழைநீர் புகுந்து விடுவதாலும் இப்பகுதியில் உள்ள வீடுகள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. மேலும், இப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு மாற்று வீடுகள் வழங்குவதற்கு BIO METRIC மூலம் சர்வே எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பகுதிகளில் உள்ள BIO METRIC சர்வே எடுக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 78 குடியிருப்புகளுக்கு மாற்று இடமாக JNNURM திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் வீடுகள் ஒதுக்க குடிசை மாற்று வாரியத்திற்கு பரிந்துரை செய்ய அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.04520/2014/டி1(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 15 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

| | |
|---|---|
| **பொருள்** | கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட துடியலூர் அல்லது உருமாண்டம்பாளையம் பகுதிகளில் இரயில் நிறுத்தம் அமைப்பது – தொடர்பாக. |
| **பார்வை** | 1) இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.00759/2012/அ12(வ) நாள் 29.07.2013 மற்றும் 27.11.2013<br>2) இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.09961/2013/டி1(வ) நாள். 01.11.13<br>**3)** மண்டல வணிக மேலாளர், தென்னக இரயில்வே, சேலம் கோட்டம் அவர்கள் கடிதம் எண் SA/C.210/ Thudiyalur/TH/14 நாள் 19.02.2014. |

-------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண் 1 துடியலூர் பகுதியில் உள்ள (மாமன்ற தீர்மானம் எண்.340 நாள்.31.01.2013 மற்றும் 281 நாள்.14.11.2013) ரூ.44,00,428/- மற்றும் வார்டு எண்.43 உருமாண்டம்பாளையம் பகுதியில் (மாமன்ற தீர்மானம் எண்.187 நாள்.19.09.2013) ரூ.39,85,250/- மாநகராட்சியின் செலவினத்தில் ஷ்ரம்தான் (Shramdhan) திட்டத்தின் கீழ் இரயில் நிறுத்தம் மீண்டும் அமைத்து இரயிலை நிறுத்தி எடுத்து செல்ல உரிய அடிப்படை வசதிகளான 100 சதுர அடி (10'X10') அளவுள்ள ஸ்டேசன் மாஸ்டர் அறை மற்றும் இரயில் நின்று செல்லும் பிளாட்பார்ம் சமன்படுத்துதல், குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதி ஆகியவை அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு பார்வை 1 மற்றும் 2-ல் காணும் ஒப்புதல் கடிதங்கள் மண்டல வணிக மேலாளர், தென்னக இரயில்வே, சேலம் கோட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

இது தொடர்பாக பார்வை 3-ல் கண்ட இரயில்வே மேலாளர் அவர்களின் கடிதத்தில், இரயில்வே துறையின் விதிகளின்படி இரு இரயில் நிறுத்தங்களுக்கு இடையே குறைந்த பட்சம் 5 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் எனவும், மேற்கண்ட துடியலூர் மற்றும் உருமாண்டம்பாளையம் இரயில் நிறுத்தங்களுக்கு இடையே 1.2 கிலோ மீட்டர் மட்டும் உள்ளதால் துடியலூர் அல்லது உருமாண்டம்பாளையம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு நிறுத்தத்தினை மாநகராட்சி தேர்வு செய்து தெரிவித்த பின்னர் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, துடியலூர் அல்லது உருமாண்டம்பாளையத்தில் இரயில் நிலையம் அமைப்பது தொடர்பாக மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மாமன்றத்தின் முடிவுக்கு ந.க.எண்.09961/2013/டி1(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 16 நாள் 11.06.2014</u>**

துடியலூரில் இரயில் நிலையம் அமைக்க தென்னக இரயில்வே -க்கு தெரிவிக்க தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 15**

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – மாநகராட்சி பகுதிகளில் சாலையோரங்களில் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தப்படுதல் – வாகனங்கள் நிறுத்தப்படுவதை குறைக்க வாகனம் நிறுத்தும் கட்டணம் வசூல் செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக. |

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான சாலைகள் மற்றும் நெடுஞ்சாலை பகுதிகளில் இரு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சாலையோரங்களில் நிறுத்தப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறாகவும், வாகன நெரிசல் அதிகஅளவில் ஏற்படும் வகையில் உள்ளது.

எனவே, சாலையோரங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதை குறைக்க, இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தத்திற்கு கட்டணம் விதிக்க மாவட்ட சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளதாலும், IDTP நிறுவனம் CDP & CMP ஆகியவற்றின் போக்குவரத்து ஆலோசனை அறிக்கையில் சாலையோர வாகனம் நிறுத்துவதற்கு கட்டணம் வசூல் செய்யும் நடைமுறை அமுல்படுத்தலாம் என்று குறிப்பிட்டு உள்ளதாலும் பொது ஏலம் மூலம் கட்டணம் நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண். 4103 /2014/ எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 17 நாள் 11.06.2014</u>**

நிபந்தனைகளுடன் பரீட்சார்த்த அடிப்படையில் அமல்படுத்த தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 16**

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு முழுமையாக அமைக்கப்பட்டு உள்ளதை உறுதி செய்த பின்னர் சொத்து வரி, குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் நடைமுறையை அமல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக. |

மழைநீர் சேகரிப்பு திட்டம் கட்டிட அனுமதி வழங்கப்படும் வரைபடத்தில் குறிப்பிட்டு கட்டிட அனுமதி வழங்க கட்டிட விதிகளில் சேர்க்கப்பட்டு உள்ளது. ஆனால் சில கட்டிடங்கள் இத்திட்டத்தின் எதிர்கால பயன் தெரியாமல் மழை நீர் சேகரிப்பு முழுமையான கட்டமைப்பு அமைக்கப்படுவதில்லை. அதேபோல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அடுக்குமாடி குடியிருப்புகளில் அமைக்கப்பட வேண்டும். அக்கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்ட பின்னர் மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் வகையில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் கழிவுநீர் நகராட்சி சாலைகளில் விடப்படக் கூடாது.

எனவே, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு முழுமையாக அமைக்கப்பட்டு உள்ளதை உறுதி செய்த பின்னரும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய அமைப்பினை 8 குடியிருப்பிற்கு மேல் கட்டப்படும் அனைத்து அடுக்குமாடி குடியிருப்பிற்கும், வணிக உபயோக கட்டிடங்களில் 10,000 ச.அடிக்கு மேல் கட்டப்படும் அனைத்து வணிக உபயோக கட்டிடங்களுக்கும் இவை தவிர மருத்துவமனை, தங்கும் விடுதி, உணவகம் உள்ளிட்ட உபயோகத்திலுள்ள அனைத்து பரப்பளவிலான கட்டிடங்களுக்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு அதனை சுழற்சி முறையில் திரும்பவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அதற்கான கட்டமைப்பு அமைக்கப்பட்டு உள்ளதை உறுதி செய்த பின்னர்தான் சொத்து வரி விதிப்பு, குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படும் என்ற நடைமுறையை மாமன்ற ஒப்புதலுடன் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண்.12262/2013/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 18 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 17**

**பொருள்:** கோயம்புத்துார் மாநகராட்சி – நகரமைப்பு – கோயம்புத்துார் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலுார் பகுதி க.ச.எண்.659ல் உள்ள 2 ஏக்கர் நிலத்தினை புதிய பேருந்து நிலையம் அமைக்க வெள்ளலுார் பேரூராட்சிக்கு வழங்க அரசிற்கு பிரேரணை அனுப்ப – மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – சம்பந்தமாக.

**பார்வை:** செயல் அலுவலர், வெள்ளலுார் பேரூராட்சி, கடிதம் ந.க.எண்.354/2013/அ, நாள்.30.01.2014.

*******

கோயம்புத்துார் மாவட்டம், வெள்ளலுார் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநர் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதாகவும், இதன்படி புதிய பேருந்து நிலையம் அமைக்க பேரூராட்சிக்கு சொந்தமான இடமோ வருவாய் துறைக்கு சொந்தமான இடமோ இல்லாத காரணத்தால் வெள்ளலுார் பேரூராட்சிக்குட்பட்ட வெள்ளலுார்–போத்தனுார் மெயின் ரோட்டில் க.ச.எண்.659ல் உள்ள கோயம்புத்துார் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 2 ஏக்கர் நிலம் மட்டும் பெற்று புதிய பேருந்து நிலையம் கட்டவும் நிலத்திற்குண்டான கிரையத் தொகையை செலுத்த சம்மதம் தெரிவித்தும் பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில், மேற்படி இடத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்க செயல் அலுவலர், வெள்ளலுார் பேரூராட்சி அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோயம்புத்துார் மாநகராட்சி வெள்ளலுார் கிராமத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் பண்ணை அமைக்க 650 ஏக்கர் நிலம் நிலஆர்ஜிதம் மூலம் பெறப்பட்டு மாநகராட்சியின் பொறுப்பில் உள்ளது. நிலமெடுப்பு சட்டம் 1894, பிரிவு 16எ ன்படி ஒரு பயன்பாட்டிற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தினை வேறு துறைக்கு வழங்குவதற்கு அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் என உள்ளது. மேலும், மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை வேறு துறைக்கு வழங்க வேண்டுமெனில் அரசின் அனுமதி பெறப்பட வேண்டும்.

ஆகவே, க.ச.எண்.659ல் உள்ள 2 ஏக்கர் இடத்தினை புதிய பேருந்து நிலையம் அமைக்க வெள்ளலுார் பேரூராட்சிக்கு வழங்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.1255/2014/ எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 19 நாள் 11.06.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 18**

**பொருள்:** கோயம்புத்துார் மாநகராட்சி – நகரமைப்பு – கோயம்புத்துார் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலுார் பகுதியில் 20 ஏக்கர் நிலத்தினை குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – சம்பந்தமாக.

**பார்வை:** நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை அவர்களின் நேர்முக கடித எண்.Q1/20325/2010 நாள்.25.03.2014.

*******

கோயம்புத்துார் மாவட்டம், வெள்ளலுார் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 650 ஏக்கர் நிலத்தில் 20 ஏக்கர் நிலத்தை JNNURM (BSUP) திட்டத்தின் கீழ் குடியிருப்பு வீடுகள் கட்ட முன்நுழைவு அனுமதி வழங்குமாறு பார்வையில் காண் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை அவர்களின் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

<u>20 ஏக்கர் இடம் தேவைப்படும் புல எண்களின் விபரம்</u>

| வ.எண். | சர்வே எண் | மொத்த பரப்பு ஹெக்டேரில் | தேவைப்படும் இடத்தின் பரப்பு ஹெக்டேரில் |
|---|---|---|---|
| 1. | 608/1 பாகம் | 1.14.50 | 0.74.88 |
| 2. | 608/2 | 1.05.50 | 1.05.50 |
| 3. | 620/எ–3, 4, 5, 6 | 1.47.00 | 1.47.00 |
| 4. | 621/ 1, 2, 3, 4, 5 | 1.37.00 | 1.37.00 |
| 5. | 622/1, 2, 3, 4 | 2.52.50 | 2.52.50 |
| 6. | 623எ | 0.92.50 | 0.92.50 |
| | மொத்தம் | | 8.09.38 ஹெக்டேர் (அ) 20 ஏக்கர் |

கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் கிராமத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் பண்ணை அமைக்க 650 ஏக்கர் நிலம் நில ஆர்ஜிதம் மூலம் பெறப்பட்டு மாநகராட்சியின் பொறுப்பில் உள்ளது. நிலமெடுப்பு சட்டம் 1894, பிரிவு 16எ ன்படி ஒரு பயன்பாட்டிற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தினை வேறு துறைக்கு வழங்குவதற்கு அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் என உள்ளது. மேலும், மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை வேறு துறைக்கு வழங்க வேண்டுமெனில் அரசின் அனுமதி பெறப்பட வேண்டும்.

ஆகவே, வெள்ளலூர் பகுதியில் உள்ள மேற்படி 20 ஏக்கர் நிலத்தினை அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்ட குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.11858/2012/ எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 20 நாள் 11.06.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 19**

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் நகராட்சிகளை உள்ளடக்கி தெற்கு மண்டலம் உருவாக்கப்பட்டுள்ளது. பழைய குனியமுத்தூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் (தற்போதைய தெற்கு மண்டலம் ) தெற்கு மண்டலம் அலுவலக கட்டிடம் கட்ட வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்க விருப்ப கேட்பு அறிக்கை கோரப்பட்டு மாமன்ற தீர்மானம் எண். 20 நாள் 25.04.2013-ன்படி தி/ள். எஸ்.பி.எஸ். நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டது. தி/ள். எஸ்.பி.எஸ். நிறுவனத்தினா் ரூ. 585.00 லட்சம் மதிப்பீட்டில் வரைபடம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கியுள்ளனா்.

தெற்கு மண்டல அலுவலக வளாகத்தில் புதிய அலுவலக கட்டிடம் ரூ. 585.00 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொது நிதியிலிருந்து அமைக்க அரசின் நிா்வாக அனுமதி பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 3355/2014/எம்.டி. 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 21 நாள் 11.06.2014</u>**

மதிப்பீடு ரூ. 585.00 லட்சம் என தட்டச்சுப் பிழையாக உள்ளதை ரூ. 490.00 லட்சம் என திருத்தம் செய்து அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஏற்கனவே 105.60 சதுரகி.மீ. பரப்பளவில் இருந்தது. பின்னர் 2011–ல் மாநகராட்சி பகுதியை சுற்றிலும் அருகில் இருந்த துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி, காளப்பட்டி, விளாங்குறிச்சி, சரவணம்பட்டி, கவுண்டம்பாளையம், வடவள்ளி, குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் வீரகேரளம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 151.44 சதுர கி.மீ. பரப்பு கொண்ட பகுதிகளை இணைத்து மாநகராட்சி 257.04 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டதாக விரிவுபடுத்தப்பட்டது. இதன்மூலம் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 10.73 லட்சமாக இருந்த மக்கள் தொகை விரிவுபடுத்தப்பட்ட பகுதி மக்கள் 5.44 லட்சம் சேர்த்து தற்சமயம் 16.17 லட்சம் மக்கள் தொகையாக உள்ளது.

இந்நிலையில் ஏற்கனவே இருந்த கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிக்கு மட்டும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 616.48 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உரிய அரசு ஆணை பெற நடவடிக்கையில் உள்ளது.

இந்த நிலையில் மாநகராட்சி பகுதியில் பழைய பகுதி மட்டும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தினால், மற்ற பகுதி மக்கள் குடிநீர் பழைய நிலையிலேயே (அதாவது 8 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் பெறும் நிலை) இருக்க நேரிடும்.

எனவே, விரிவுபடுத்தப்பட்ட மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் புதிய திட்டம் தயார் செய்ய வேண்டுமா அல்லது ஏற்கனவே நடைமுறையில் உள்ள பில்லூர் – I, பில்லூர் –II மற்றும் சிறுவாணி போன்ற திட்டங்களுடன் பில்லூர் – I, பல்லடம் திட்டம், கவுண்டம்பாளையம், வடவள்ளி திட்டம், குறிச்சி– குனியமுத்தூர் திட்டம் ஆகிய சிறு திட்டங்களும் ஒருங்கிணைத்து 24 மணி நேரமும் குடிநீர் வழங்கிட இயலுமா என்பது குறித்து திட்ட அறிக்கை தயார் செய்யுமாறு தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு குடிநீர் மேலாண்மை நிறுவனம், சென்னைக்கு (TamilNadu Water Investment Company Limited) 03.04.2014–ல் கடிதம் அனுப்பப்பட்டது.

தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு குடிநீர் மேலாண்மை நிறுவனம், சென்னை அவர்கள் தனது 03.05.2014–ந் தேதிய கடிதம் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் சம்பந்தமான விரிவாக அறிக்கை தயார் செய்ய கீழ்க்கண்ட இரணடு விதமாக முன்மொழிவுகள் தயார் செய்ய ஆகும் செலவு விபரம் மற்றும் தங்களிடம் பொறுப்பு ஒப்படைத்து எத்தனை நாட்களில் மேற்படி திட்ட அறிக்கை செய்ய இயலும் என்பதனையும் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| சிப்பம் I | நேரிடையாக தள ஆய்வு மற்றும் சர்வே செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி | ரூ. 90.60 லட்சம் |
| சிப்பம் II | ஏற்கனவே உள்ள புவியியல் வரைபடத்தினை கொண்டு (Arial Map) விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி | ரூ. 63.10 லட்சம் |

| வரிசை எண் | திட்ட அறிக்கை விபரம் | தயார் செய்ய ஆகும் நாட்கள் விபரம் |
|---|---|---|
| 1 | முதல்கட்ட திட்ட அறிக்கை | பணி ஒப்படைப்பு செய்த நாளில் இருந்து 15 நாட்கள் கழித்து 45 நாட்கள் |
| 2 | வரைவு திட்ட அறிக்கை | முதல் கட்ட திட்ட அறிக்கை அனுமதித்த பின்பு 75 நாட்கள் |
| 3 | முழுமையான திட்ட அறிக்கை | வரைவு திட்ட அறிக்கை அனுமதித்த பின்பு 30 நாட்கள் |

மேற்கண்ட இரண்டு முறைகளில் முதல் திட்டமான நேரிடையாக தள ஆய்வு மற்றும் சர்வே செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிகள் துல்லியமானதாக இருக்கும் என்பதால் அதன்படி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அதன் அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு குடிநீர் மேலாண்மை நிறுவனம், சென்னை வசம் ஒப்படைப்பு செய்யவும், அதற்கான செலவுத் தொகை ரூ. 90.60 லட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :அ) நேரிடையாக தள ஆய்வு மற்றும் சர்வே செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அதன் அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு குடிநீர் மேலாண்மை நிறுவனம், சென்னை வசம் ஒப்படைப்பு செய்ய ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) திட்ட அறிக்கைக்கான செலவுத் தொகையான ரூ. 90.60 லட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 9190 /02/ஜே.என்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 22 நாள் 11.06.2014</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுப் பணித்துறைக்கு சொந்தமான குறிச்சி குளத்தை மாநகராட்சி மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய கோருதல் - தொடர்பாக.

--------

மாநகரப் பகுதியில் நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்த பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான நீர்த்தேக்க குளங்களை தூர்வாரி, கழிவுநீர் கலப்பதனை தடுத்து, கரைகளை பலப்படுத்தி, கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் பராமரிப்பு மேற்கொள்ள அரசிடம் ஒப்புதல் பெற்று கீழ்கண்ட 8 குளங்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி வசம் பராமரிப்பில் உள்ளது.

1. கிருஷ்ணாம்பதி குளம்
2. செல்வாம்பதி குளம்
3. குமராசாமி / முத்தண்ணன் குளம்
4. பெரியகுளம்
5. நரசாம்பதி குளம்
6. செல்வசிந்தாமணி குளம்
7. வாலாங்குளம்
8. சிங்காநல்லூர் குளம்

தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட குறிச்சி பகுதியில் உள்ள க.ச.எண்.131/1, 329.84 ஏக்கர் பரப்பளவிலும் 6.35 கிலோ மீட்டர் சுற்றளவிலும் அமைந்துள்ள பொதுப் பணித்துறை பயன்பாட்டில் உள்ள குறிச்சி குளம் மற்றும் நீர்வரத்து வாரியில், தற்பொழுது குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், மேற்படி குளத்தில் இயற்கை வாட்டத்திற்கு ஏற்ப கலக்கின்றன. இதன் விளைவாக குளம் மாசு அடைந்து சுகாதார கேட்டை விளைவிக்கிறது.

ஆகவே, இக்குளத்தை புனரமைத்து மழைநீரை சேகரித்து அதன்மூலம் நிலத்தடி நீர் மட்டம் பராமரிக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது. இக்குளத்தில் மழைநீர் சேகரிப்பதால் குனியமுத்தூர், குறிச்சி, சுந்தராபுரம் மற்றும் போத்தனூர் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு இருக்கும். மேலும் இக்குளக்கரையினை பலப்படுத்தி பூங்காக்கள் , நடைபாதை அமைப்பதால் சாலை விபத்துக்கள் தவிர்க்கப்படுவதை கருத்தில் கொண்டும், நகரப் பொதுமக்கள் நலன்கருதியும், அவசியம் கருதி இக்குளத்தை பொதுப்பணித் துறையிடமிருந்து மாநகராட்சி மூலம் பராமரிப்பு மேற்கொள்ளும் பொருட்டு இம்மாநகராட்சிக்கு ஒப்படை செய்ய அரசினரைக் கோர அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.4521/2014/எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 23 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

அரசாணை எண் **114**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் **25.08.2011** ன் படி கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் **11** உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டு **100** வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளதால் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய பணிகள் செம்மையாக நடைபெற **75** தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்ய மாமன்ற தீர்மான எண் **318** நாள் **28.12.2012** ன் படி அரசுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரசிடம் கோரப்பட்டுள்ள **75** தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியிடத்திற்கு அரசின் அனுமதி பெறப்படும் வரை மாமன்ற தீர்மான எண் **265** நாள் **20.10.2013** ன்படி தற்காலிகமாக ஆறு மாதகாலத்திற்கு உத்தேச செலவினம் ரூ. **18.00** இலட்சத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் **30** தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்களின் ஒப்பந்த காலம் மே **2014**ம் மாதத்துடன் நிறைவடைந்தது. நாளது வரை அரசிடமிருந்து அனுமதி ஏதும் பெறப்படாததால் மீண்டும் மதிப்பீடு தயாரித்து ஒப்பந்தப்புள்ளி கோரி தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்யும் வரை தற்போது உள்ள தொழில்நுட்ப உதவியாளர்களின் ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் செலவினங்களை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். **ந.க.எண்.5450/2013/எம்டி.4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 24 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி -மத்திய மண்டலம் - வார்டு எண்.72 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகளுக்கு - 3 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யப்பட்டதில் - பாஸ்போர்ட் அலுவலகம் கோவை-18 அலுவலகத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை - மறு பரீசிலனை செய்ய வேண்டுவது -தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) மாமன்ற தீர்மான எண்.184 நாள்.16.08.2012
4) இவ்வலுவலக கடித ந.க.எண்.5253,2012,அ1(ம) நாள்.01.02.2014.
5) ரீஜனல் பாஸ்போர்ட் அலுவலர், பாஸ்போர்ட் அலுவலகம் கோவை -18 அவர்களின் கடித எண்.CBE/875/6/08, நாள்.09.04.2014

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன்படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன்படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின்படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய அரசு நிறுவனமான பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு 14.09.2008-ல் ஒப்படை செய்யப்பட்டு மூன்று வருடங்கள் 14.09.2011-வுடன் முடிவடைவதால் வாடகை 15.09.2011 முதல் 31.03.2014 வரை 15 சதவீதம் உயர்வு ரூ.2,28,505/-என நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்ட வாடகையில் 15.09.2011 முதல் உயர்வு செய்யப்பட்ட வாடகையின் வித்தியாச தொகையினையும் மற்றும் இனிவரும் மாதங்களில் உயர்வு செய்யப்பட்ட வாடகை ரூ.2,28,505/-யினை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

பார்வை 5-ல் காணும் கடிதத்தில் 11.02.2013-ம் தேதிய ஒப்பந்தப்பத்திரத்தின்படி உயர்வு செய்யப்பட்ட வித்தியாச வாடகை தொகை மற்றும் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை குறைத்துத்தரக் கோரியும் 15.10.2012 முதல் 14.10.2015 வரை உள்ள மூன்றாண்டுகளுக்கு மாத வாடகையாக ரூ.198700/- செலுத்த அனுமதிக்கும்படி தெரிவித்துள்ளார்கள்.

15.10.2012 முதல் 14.10.2015 வரை மூன்றாண்டுகளுக்கு மாத வாடகை ரூ.198700/-யை செலுத்துவது குறித்து மறு பரிசீலனை செய்ய மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.5253/2012/அ2(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 25 நாள் 11.06.2014</u>**

அரசு நிறுவனமாக இருப்பதால் கோரிக்கையை ஏற்று 15.10.2012 முதல் 14.10.2015 வரையுள்ள காலத்திற்கு மாத வாடகையாக ரூ.1,98,700/- செலுத்த அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் **–** வடக்கு மண்டல தலைவர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் வார்டு எண்.**46** மாமரத்தோட்டம் பகுதியில் பழுதடைந்த உபயோகமற்ற பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதியதாக சுற்றுசுவருடன் நுகர்வோர் அங்காடி மற்றும் நூலகம் கட்ட மதிப்பீடு ரூ.**25.30** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மாமன்ற தனது தீர்மான எண் **375** நாள் **17.02.2014** படி பணி உத்திரவு வழங்கபட்டுள்ளது.

மேற்படி கட்டிடம் மாநகராட்சி நிதி மூலம் வணிக பயன்பாட்டு கட்டமாக கட்டப்பட்டு, பொதுப்பணித் துறையால் நிர்ணயம் செய்யப்படும் வாடகை அடிப்படையில் நுகர்வோர் அங்காடி மற்றும் நூலகத்திற்கு ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். 10134 /2013/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 26 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 25**

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு தினசரி 7.60 மில்லியன் லிட்டரும், சிறுவாணி குடிநீர் திட்டத்தில் 7.20 மில்லியன் லிட்டரும் பெறப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அழியார் கூட்டு குடிநீர் திட்டத்தில் அடிக்கடி ஏற்படும் மின் தடை காரணமாகவும், மேலும் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் கசிவுகளின் காரணமாகவும் நிர்ணயிக்கப்பட்ட 7.60 மில்லியன் லிட்டரிலிருந்து 2.20 மில்லியன் லிட்டர் குறைவாக, அதாவது 5.40 மில்லீயன் லிட்டர் வரை தான் தற்போது குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட காரணத்தினால் குடிநீர் விநியோகத்தில் குடிநீர் வழங்கும் கால இடைவெளி 10 தினங்களிலிருந்து 14/15 தினங்களாக அதிகரித்துள்ளதால் பொது மக்களுக்கு சீரான கால இடைவெளியில் சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பொது மக்களுக்கு தங்குதடையின்றி சீரான இடைவெளியில் சீரான குடிநீர் விநியோகிக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு, சிறுவாணி திட்டத்திலிருந்து காந்தி பூங்கா நீர் தேக்கத் தொட்டிக்கு குடிநீர் கொணரும் 450 மிமீ வார்ப்பு இரும்பு குழாயில் பூஜ்ஜியம் முனை பகுதியிலிருந்து இணைப்பு ஏற்படுத்தி ஆறுமுக கவுண்டனூர் வரை 300 மிமீ வார்ப்பு இரும்பு குழாய் அமைத்து 3 மில்லியன் லிட்டர் வரை கூடுதலாக குடிநீர் பெறுவதற்கு ரூ.74.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் - 4517/2014/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 27 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 26**

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு தினசரி 7.60 மில்லியன் லிட்டரும், சிறுவாணி குடிநீர் திட்டத்தில் 7.20 மில்லியன் லிட்டரும் பெறப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அழியார் கூட்டு குடிநீர் திட்டத்தில் அடிக்கடி ஏற்படும் மின் தடை காரணமாகவும், மேலும் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் கசிவுகளின் காரணமாகவும் நிர்ணயிக்கப்பட்ட 7.60 மில்லியன் லிட்டரிலிருந்து 2.20 மில்லியன் லிட்டர் குறைவாக, அதாவது 5.40 மில்லியன் லிட்டர் வரை தான் தற்போது குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட காரணத்தினால் குடிநீர் விநியோகத்தில் குடிநீர் வழங்கும் கால இடைவெளி 10 தினங்களிலிருந்து 14/15 தினங்களாக அதிகரித்துள்ளதால் பொது மக்களுக்கு சீரான கால இடைவெளியில் சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பொது மக்களுக்கு தங்குதடையின்றி சீரான இடைவெளியில் சீரான குடிநீர் விநியோகிக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு, NTP வீதியிலிருந்து கோவைப்புதூர் 3ம் நிலை கீழ் நிலை நீர் தேக்க தொட்டி வரை 300 மிமீ அளவிலான வார்ப்பு இரும்பு குழாய் அமைத்து 3 மில்லியன் லிட்டர் வரை கூடுதலாக குடிநீர் பெறுவதற்கு ரூ.75.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் - 4518/2014/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 28 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 27**

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு தினசரி 7.60 மில்லியன் லிட்டரும், சிறுவாணி குடிநீர் திட்டத்தில் 7.20 மில்லியன் லிட்டரும் பெறப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அழியார் கூட்டு குடிநீர் திட்டத்தில் அடிக்கடி ஏற்படும் மின் தடை காரணமாகவும், மேலும் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் கசிவுகளின் காரணமாகவும் நிர்ணயிக்கப்பட்ட 7.60 மில்லியன் லிட்டரிலிருந்து 2.20 மில்லியன் லிட்டர் குறைவாக, அதாவது 5.40 மில்லியன் லிட்டர் வரை தான் தற்போது குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட காரணத்தினால் குடிநீர் விநியோகத்தில் குடிநீர் வழங்கும் கால இடைவெளி 10 தினங்களிலிருந்து 14/15 தினங்களாக அதிகரித்துள்ளதால் பொது மக்களுக்கு சீரான கால இடைவெளியில் சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பொது மக்களுக்கு தங்குதடையின்றி சீரான இடைவெளியில் சீரான குடிநீர் விநியோகிக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு, ஆறுமுக கவுண்டனூர் முதல் சுண்டக்காமுத்தூர் வரை 300 மிமீ வார்ப்பு இரும்பு குழாய் அமைத்து 3 மில்லியன் லிட்டர் வரை கூடுதலாக குடிநீர் பெறுவதற்கு ரூ.75.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் - 4519/2014/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 29 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 28**

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – 70 விபரப் பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் ஒரு வலையமைப்பு (Network) பொறியாளர், ஒரு உதவி வலையமைப்பு (Network) பொறியாளர் - ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பு.

-----------------

கோவை மாநகராட்சிக்குட்பட்ட பிரதான அலுவலகங்களில் உள்ள அனைத்து தலைமை அதிகாரிகளின் கீழ் கணினியில் பணிகள் மேற்கொள்வதற்கும், மற்றும் 5 மண்டலங்களில் கணினியின் மூலம் வரி மற்றும் வரியில்லா இனங்கள் மற்றும், மாதாந்திர ஊதியப் பட்டியல் தயாரித்தல், பிறப்பு, இறப்பு பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் கணினியில் பணி மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 70 விபரப் பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் ஒரு வலையமைப்பு (Network) பொறியாளர், ஒரு உதவி வலையமைப்பு (Network) பொறியாளர் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்கண்ட பணியினை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.75,00,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 3777 / 2014/ குவி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 30 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 29**

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - வார்டு எண் 87-க்கு உட்பட்ட திருமூர்த்தி நகர், திருவள்ளுவர் நகர் மற்றும் காந்தி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்த காரணத்தினால் அதனை சரிசெய்யும் பொருட்டு இச்சாலைகளுக்கு தார் தளம் திரும்ப அமைக்கும் பணிக்கு **ரூ. 71,40,000/-** க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க. எண். 4110 / 2014/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 31 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 30

கோவை மாநகராட்சி - தெற்கு மண்டலத்திற்குட்பட்ட திருவள்ளுவர் நகர் மற்றும் காந்தி நகர் ஆகிய பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தினால் கழிவுநீர் வெளியேற வழியில்லாமல் ஆங்காங்கே தேங்கி நிற்கிறது. இதனால் இப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே இப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலை திரும்ப கட்டுதல் பணிக்கு **ரூ. 74,80,000/-** க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க. எண். 4111 / 2014/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 32 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 31

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட நகர் நல மையங்களில் காலியாக உள்ள 2 பெண் மருத்துவ அலுவலர் பணியிடங்களும் - மருந்தகங்களில் 7 மருத்துவ அலுவலர் பணியிடங்களும், 7 மருந்தாளுநர் (அலோபதி – 5, ஆயுர்வேத -2) பணியிடங்களும் Outsourcing மூலம் நிரப்புவதற்கு அனுமதி கோருதல் - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின்கீழ் 20 நகர் நல மையங்களும், 16 மாநகராட்சி மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. இதில் 2 பெண் மருத்துவ அலுவலர் பணியிடங்களும் மருந்தகங்களில் மருத்துவ அலுவலர் 7 பணியிடங்களும், 7 மருந்தாளுநர் (அலோபதி – 5, ஆயுர்வேத -2) பணியிடங்களும் காலியாக உள்ளன. வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் இப்பணியிடங்களுக்கு அழைப்பு விடுத்தும் நிரந்தரமாக இப்பணியிடங்களை நிரப்ப முடியவில்லை.

இதனால் பொது மக்களுக்கு மருத்துவ சேவை செய்வதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே காலியாக உள்ள இப்பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரந்தரமாக இப்பணியிடங்களை பூர்த்தி செய்யும் வரை Outsourcing மூலம் நிரப்புவது குறித்தும், "NUHM" திட்டம் மூலம் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவதற்கும் சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண்.43 நாள்.09.06.2014-ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களை, மருந்தாளுநர் பணியிடங்களையும் Outsourcing மூலம் நிரப்புவது குறித்தும், "NUHM" திட்டம் மூலம் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.8016/2013/எம்.இ.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 33 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 32

**பொருள்** - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.23 வரிவிதிப்பு எண்.2320044-ற்கு D.B. ரோடு வணிக வளாக கடை எண்.6 திருமதி.நீலம்நந்தா என்பவர் பெயரிலிருந்து திரு.T.பாலாஜி பெயருக்கு பெயர்மாற்றம் செய்வது சம்பந்தமாக – மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடர்பாக.

**பார்வை** -
1. திரு.T.பாலாஜி அவர்களின் விண்ணப்ப நாள் 05.11.2013
2. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள். 28.01.2014
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.188 நாள்.12.02.2014
4. ஒத்திவைக்கப்பட்ட மாமன்ற தீர்மான எண்.411 நாள் 17.2.2014.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.23 D.B. ரோடு வணிக வளாக கடை எண்.6 வரிவிதிப்பு எண்.2320044 M.R.பாலு அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு திருமதி.நீலம்நந்தா என்பவருக்கு 01.02.1992-ம் தேதி முதல் ரூ1,620/- என்ற வாடகை அடிப்படையில் உரிமம் பெயர் மாற்றம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது பொதுப்பணிதுறை மதிப்பீட்டின்படி 01.04.2012 முதல் ரூ.6,370/- என்ற அடிப்படையில் உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை எண்.6-ஐ திரு.T.பாலாஜி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய 12.11.2013-ம் தேதி ஆட்சேபபனையின்மை சான்றிதழ் கொடுத்துள்ளார். எனவே கடையானது 456 சதுரடிக்கு பொதுப்பணித்துறை மதிப்பு ரூ.25,080/- ஆகும்.

பார்வை 2-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி வணிக வளாக கடைக்கு பெயர்மாற்றம் செய்ய அரசாணை(நிலை) எண்.92/30.07.2007 நகராட்சி நிர்வாகம்(ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.30.07.2007-ல் ஒரு வருட வாடகை தொகை ரூ.3,00,960/- வைப்புத்தொகை ரூ.3,00,960/- மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.5,000/- செலுத்தியுள்ளார்.

எனவே மேற்படி வணிக வளாக கடை எண்.6-ற்கு ரூ.25,080/- என வாடகை நிர்ணயம் செய்து திருமதி.நீலம்நந்தா பெயரிலிருந்து திரு.T.பாலாஜி பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.188 நாள்.12.02.2014-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. மாமன்ற தீர்மான எண்.411 நாள்.17.2.2014-ன்படி பொருள் ஒத்திவைக்கப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.10995/ 2013 / அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 34 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 33

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.84 உக்கடம் புதிய மீன் மார்கெட் கட்டணகழிப்பிடம் மற்றும் இரண்டு சக்கரவாகனம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் தொடர்பாக.

பார்வை :
1.மாமன்ற தீர்மான எண்.315.நாள்.30.12.2013
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.16.05.2014
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 11 நாள்.09.06.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த குத்தகை இனங்களில் வார்டு எண்.84 உக்கடம் புதிய மீன் மார்கெட் கட்டணகழிப்பிடம் மற்றும் இரண்டு சக்கரவாகனம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 24.09.2013ல் நடைபெற்ற ஏலத்தில் திரு.எம். சுலைமான் அவர்களுக்கு பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி 12.01.2014 முதல் 31.03.2014 வரையிலான காலத்திற்கு ஒப்படைசெய்யப்பட்டது.

மேற்படி இனத்தினை நடத்த இயலாத காரணத்தால் மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக குத்தகைதாரர் கடிதம் வழங்கி 01.04.2014. முதல் 30.04.2014. வரையிலான 1 மாத காலத்திற்கு மட்டும் முந்தைய தொகையில் 5 சதவீதம் உயர்வுடன் பிற வரிகளும் சேர்த்து தொகை செலுத்தி நீட்டிப்பு செய்துள்ளார். 01.05.2014 முதல் துறை மூலம் வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இரண்டாம் ஆண்டிற்கு தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் பொது ஏல விதிகளின்படி திரு.எம். சுலைமான் செலுத்திய வைப்பு தொகை ரூ.25000/-க்கான ரசீது எண் 201401111489-ல் உள்ள தொகையினை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவு வைக்கவும் திரு.எம். சுலைமான் பெயரினை கறுப்பு பட்டியலில் சேர்க்கவும் இவ்வினத்தினை மறு ஏலத்தில் சேர்க்க விளம்பரம் செய்தமைக்கு பின்னேற்பு வேண்டியும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்று கொள்ளவும் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.11நாள். 09.06.2014–ன் படி (அ)குத்தகைதாரர் செலுத்திய வைப்புத்தொகையினை பறிமுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. (ஆ) ஏலத்திற்கு கொண்டு வர பின்னேற்பு வழங்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 11939/12013/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 35 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 34

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண். 54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வணிக வளாகத்தில் மாற்று திறனாளிகளுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளில் கடை எண்.4 மற்றும் 5-க்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமம் ரத்து செய்தல் – மறு ஏலம் கோருவது - தொடர்பாக.

பார்வை :
1. மாமன்ற தீர்மான எண்.388 நாள்.17.02.2014
2. இவ்வலுவலக கடித எண்.ந.க.எண.9659/10/அ1(ம) நாள்.17.03.2014. (கடை எண்.4 மற்றும் 5)
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 09 நாள்.09.06.2014.

-----

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் மாத வாடகை கடைகள் பாா்வை 1-ல் காணும் மாமன்ற தீா்மான எண்.388 நாள். 17.02.2014 -ன்படி திரு. K. முருகானந்தம் அவா்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| வ. எண் | இனம் | ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்தபட்ச ஏலத்தொகை மற்றும் ஏலதாரா் பெயா் |
|---|---|---|
| 1 | காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிகவளாக கடைகள் மாற்று திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது (ஆா்.வி. ஹோட்டல் எதிரில்) கடை எண். 4 (32.50 சதுரடி) அரசு நிா்ணய மதிப்பீடு .2011/- | ரூ. 2,050/- ( திரு. K. முருகானந்தம் ஒப்பந்தப்புள்ளி) |
| 2 | காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிகவளாக கடைகள் மாற்று திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது (ஆா்.வி. ஹோட்டல் எதிரில்) கடை எண். 5(29.25 சதுரடி) அரசு நிா்ணய மதிப்பீடு ரூ.1810/- | ரூ. 1,850/- ( திரு. K. முருகானந்தம் ஒப்பந்தப்புள்ளி) |

பாா்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் படி மேற்படி கடைகளுக்கான வைப்புத்தொகை, ஒரு வருட வாடகை முன் வைப்புத்தொகை மற்றும் மின்சார வைப்புத்தொகை செலுத்த கோரி அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

திரு.K.முருகானந்தம் அவா்கள் மேற்படி கடை எண்.4 மற்றும் 5-க்கான ஏலத்தொகைகளை செலுத்தி கடையை பொறுப்பு ஏற்காததால் திரு. K. முருகானந்தம் அவா்களுக்கு மாமன்ற தீா்மானத்தின் ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமத்தை ரத்து செய்து அவருடைய பெயரை கருப்பு பட்டியில் சோ்க்கவும் அக்கடைகளை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான விளம்பர கட்டண செலவினங்களை ஏற்கவும் அனுமதி வேண்டி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீா்மான எண்.09 நாள்.09.06.2014–ன் படி உரிமம் ரத்து செய்து கறுப்புபட்டியலில் பெயரினை சோ்க்க மாமன்றத்திற்கு பரிந்துரைத்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9659 / 2010 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 36 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 35

பொருள் கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.51 சீனிவாசபுரம் தினசரி மாா்க்கெட் மாமிச கடைகளை உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது – தொடா்பாக

பாா்வை வரிவிதிப்பு மற்றம் நிதிக்குழு தீா்மான எண். 14 நாள்.09.06.2014.

---------

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 05.06.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 05.06.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரா் பெயா் |
|---|---|---|
| 1 | சீனிவாசபுரம் தினசரி மாா்க்கெட் மாமிச கடை எண். 16 அரசுநிா்ணய மதிப்பீடு ரூ.975/- | ரூ.980/- திரு.K.R.ராஜா (மின் ஏலம்) |
| 2 | சீனிவாசபுரம் தினசரி மாா்க்கெட் மாமிச கடை எண். 17 அரசுநிா்ணய மதிப்பீடு ரூ.975/- | ரூ.980/- திரு.K.R.ராஜா (மின் ஏலம்) |

மேற்குறிப்பிட்ட இனத்திற்கு பல முறை ஏலம் நடைபெற்றும் ஒருவரும் ஏலம் கோர முன் வரவில்லை. 05.06.2014 நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.16 மற்றும் 17க்கு திரு.K.R.ராஜா அவா்களிடமிருந்து ரூ.980/-க்கு மின்ஏலம் அரசு மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக பெறப்பட்டுள்ளது.

இவ்வினங்களை (கடை எண்.16 மற்றும் 17) ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீா்மான எண்.14 நாள்.09.06.2014–ன் படி உயா்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 37 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 36

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.71 ரேஸ்கோர்ஸ் நவீன கட்டண கழிப்பிடத்தை ஏல இனங்களிலிருந்து நீக்கம் செய்வது தொடர்பாக.

பார்வை : 1.மாமன்ற தீர்மான எண்.340 நாள்.30.12.2013
2.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.31.03.2014
3.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 13 நாள்.09.06.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த குத்தகை இனங்களுக்கு 01.04.2014 முதல் 31.03.2017 வரையிலான ஆண்டிற்கு 20.02.2014-ல் நான்காவது முறையாக பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

ரேஸ்கோர்ஸ் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2011-2012-ம் ஆண்டுக்கு ரூ.16,000/- திரு.A.வெங்கடேஷ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்ததால் இவ்வினம் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி பொது மின் ஏலத்தில் கொண்டு வரப்பட்டது.

ரேஸ்கோர்ஸ் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2014-2017-ம் ஆண்டுக்கு அரசு நிர்ணயம் செய்த தொகை ரூ.19,000/- ஆகும். இவ்வினத்திற்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. அரசு நிர்ணயம் செய்த தொகையினை 365 நாட்களுக்கு கணக்கீடு செய்யும் பட்சத்தில் நாளொன்றுக்கு வசூல் தொகை சுமார் ரூ.52/- ஆகும். முந்தைய குத்தகைதாரர் திரு.A.வெங்கடேஷ் அவர்கள் இவ்வினத்தை நீட்டிப்பு செய்ய விருப்பமின்மை கடிதம் வழங்கியுள்ளதால் 01.04.2014-முதல் இவ்வினத்தை ஒரு துப்புரவு பணியாளர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

எனவே மாநகராட்சிக்கு ஏற்படும் தொடர் இழப்பினை கருத்தில் கொண்டு ரேஸ்கோர்ஸ் நவீன கட்டண கழிப்பிடத்தை ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்து அப்பகுதி மக்களுக்கு இலவசமாக பயன்படுத்த அனுமதிக்கப்படுவது தொடர்பாக முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.13 நாள்.09.06.2014–ன் படி பொருளில் குறிப்பிட்டப்பட்ட இனத்தினை ஏல இனங்களிலிருந்து நீக்க மாமன்றத்திக்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11939 / 2013 / அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 38 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 37

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.83 ராஜவீதி மருந்தகவளாகம் அருகிலுள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் தொடர்பாக.

பார்வை : 1. மாமன்ற தீர்மான எண்.314 நாள்.30.12.2013
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.16.05.2014.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 7 நாள்.09.06.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த குத்தகை இனங்களில் வார்டு 83 ராஜவீதி மருந்தகவளாகம் அருகிலுள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கரவாகனங்கள் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் .13.11.2013 ல் நடைபெற்ற ஏலத்தில் திரு.ஏ.சிவகுமார் அவர்களுக்கு பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி 1.12.2013. முதல்31.03.2014 வரை (நான்கு மாதங்களுக்கு மட்டும் ) ஒப்படைசெய்யப்பட்டது .

மேற்படி இனத்தினை நடத்த இயலாத காரணத்தால் மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக குத்தகைதாரர் கடிதம் வழங்கி 01.04.2014 முதல் 30.06.2014. வரையிலான 3 மாத காலத்திற்கு முந்தைய தொகையில் 5 சதவீதம் உயர்வுடன் பிற வரிகளும் சேர்த்து மொத்தம் ரூ 678277/- செலுத்தி நீட்டிப்பு செய்துள்ளார்.

இரண்டாம் ஆண்டிற்கு தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் பொது ஏல விதிகளின்படி திரு.ஏ.சிவகுமார் அவர்கள் செலுத்திய வைப்பு தொகை &.75000/- க்கான ரசீது எண் 201308293647-ல் உள்ள தொகையினை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவு வைக்கவும் இவரது பெயரினை கறுப்பு பட்டியலில் சேர்க்கவும் இவ்வினத்தினை மறு ஏலத்தில் சேர்க்க விளம்பரம் செய்தமைக்கு பின்னேற்பு வேண்டியும் அதற்கான செய்தித்தாள் விளம்பற கட்டண செலவினங்களை ஏற்று கொள்ளவும் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும்

நிதிகுழு தீர்மான எண்.7 நாள்.09.06.2014 –ன் படி 1)ஏலத்திற்கு கொண்டு வர பின்னேற்பு வழங்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. 2)குத்தகைதாரர் செலுத்திய வைப்பு தொகையினை பறிமுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11939 / 2013 / அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 39 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 38

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் பி.3 காவல் நிலையம் அருகில் உள்ள நவீன கட்டணகழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் தொடர்பாக.

பார்வை : 1.மாமன்ற தீர்மான எண்.405.நாள்.18.03.2013
2.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.16.05.2014
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 10 நாள்.09.06.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த குத்தகை இனங்களில் வார்டு எண்.54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் பி.3 காவல் நிலையம் அருகில் உள்ள நவீன கட்டணகழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.சி.செல்வம் அவர்களுக்கு பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி முதலாம் ஆண்டுக்கு(2013-2014 )ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி இனத்தினை(2013-2014) இரண்டாம் ஆண்டிற்கு நடத்த இயலாத காரணத்தால் மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக குத்தகைதாரர் கடிதம் வழங்கி .01.04.2014 முதல் 30.06.2014 வரையிலான 3 மாத காலத்திற்கு மட்டும் முந்தைய தொகையில் 5 சதவீதம் உயர்வுடன் பிற வரிகளும் சேர்த்து செலுத்தி நீட்டிப்பு செய்துள்ளார்.

எனவே பொது ஏல விதிகளின்படி திரு.சி.செல்வம் அவர்கள் செலுத்திய வைப்பு தொகை & 75000/-க்கான ரசீது எண் 201303304367-ல் உள்ள தொகையினை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவு வைக்கவும் திரு.சி.செல்வம் பெயரினை கறுப்பு பட்டியலில் சேர்க்கவும் இவ்வினத்தினை மறு ஏலத்தில் சேர்க்க விளம்பரம் செய்தமைக்கு பின்னேற்பு வேண்டியும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்று கொள்ளவும் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.10 நாள்.09.06.2014–ன் படி (அ)குத்தகைதாரர் செலுத்திய வைப்புத்தொகையினை பறிமுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. (ஆ) ஏலத்திற்கு கொண்டு வர பின்னேற்பு வழங்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11939 / 2013 / அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 40 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 39

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.50 ராஜுரோடு மேற்கு தரைதளம் கடை எண்.2-யை உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக

பார்வை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 15 நாள்.09.06.2014.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 05.06.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 05.06.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.50 ராஜுரோடு (மேற்கு) தரைதளம் கடை எண்.2 (161.46சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.4,610/- | ரூ.8001/-<br>திரு.D.ரமேஷ்குமார்<br>(ஒப்பந்தப்புள்ளி) |

மேற்குறிப்பிட்ட இனத்திற்கு 24.09.2013, 13.11.2013, 10.01.2014, 06.02.2014, 20.02.2014 மற்றும 21.05.2014 வரை ஆறு முறை ஏலம் நடைபெற்றும் ஒருவரும் ஏலம் கோர முன் வரவில்லை. 05.06.2014 நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.2க்கு திரு.D.ரமேஷ்குமாா் அவா்களிடமிருந்து பெறப்பட்ட உயா்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.8001/- அரசு மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக பெறப்பட்டுள்ளது.

எனவே இவ்வினத்தை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீா்மான எண்.15 நாள்.09.06.2014 –ன் படி உயா்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீாமானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 41 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 40

பொருள் கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரைதளம் கடை எண்.5-யை உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது – தொடா்பாக

பாா்வை வரிவிதிப்பு மற்றம் நிதிக்குழு தீா்மான எண்.16 நாள்.09.06.2014.

----------

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 05.03.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண் | இனம் | 06.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரா் பெயா் | 05.03.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரா் பெயா் |
|---|---|---|---|
| 1. | வாா்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரை தளத்தில் கடை எண். 5 (186சதுரடி ) அரசுநிா்ணய மதிப்பீடு ரூ.16,700/- | ரூ.17,000/- திரு.R.K.விஜயராஜ் (ஒப்பந்தப்புள்ளி) | - |

மேற்படி இனத்திற்கு 10.01.2014, 06.02.2014, 20.02.2014 மற்றும் 05.03.2014 -ல் நான்கு முறை ஏலம் நடை பெற்றது. அரசு நிா்ணயம் செய்த மதிப்பு ரூ.13578/- ஆகும். திரு.R.K.விஜயராஜ் அவா்களிடமிருந்து 10.01.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் ரூ.16700/-உயா்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மீண்டும் 06.02.2014 அன்று நடைபெற்ற மறு ஏலத்தில் இவ்வினத்திற்கு திரு.R.K.விஜயராஜ் அவா்களிடமிருந்து ரூ.17000/-உயா்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. திரு.R.K.விஜயராஜ் அவா்கள் 20.02.2014 மற்றும் 05.03.2014 (05.03.2014 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 21.05.2014 அன்று திறக்கப்பட்டது) அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்துக்கொண்டாா் ஆனால் ஏலக்கோரிக்கை அளிக்கவில்லை.

இவ்வினத்திற்கு நான்கு முறை ஏலம் நடைபெற்று உள்ளதால் 06.02.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு.R.K.விஜயராஜ் அவா்களிடமிருந்து பெறப்பட்ட உயா்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.17000/- அரசு மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக உள்ளது .

எனவே இவ்வினத்தை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீா்மான எண்.16 நாள். 09.06.2014–ன் படி உயா்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.10925/13/அ1(ம)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 42 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 41

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரைதளம் கடை எண்.7-யை உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக

பார்வை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.17 நாள்.09.06.2014.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 05.06.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 20.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 05.06.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயா |
|---|---|---|---|
| 1. | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரை தளத்தில் கடை எண். 7 (186சதுரடி ) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.13,578/- | - | ரூ.25,350/- திருமதி.R.சண்முகபிரியா (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு 10.01.2014, 06.02.2014, 20.02.2014 மற்றும 21.05.2014 வரை நான்கு முறை ஏலம் நடைபெற்றது. 05.06.2014 அன்று ஐந்தாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.7-க்கு திருமதி.R.சண்முகபிரியா அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

எனவே இவ்வினத்தை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.17 நாள். 09.06.2014–ன் படி உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீமானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.10925/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 43 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 42

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.72 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அலுவலகத்தை 31.05.2014ல் அன்று காலி செய்ததை தொடர்ந்து அலுவலகத்தை பொது ஏலத்தில் சேர்ப்பது தொடர்பாக

பார்வை : 1. மேற்பார்வைப் பொறியாளர், த.கு.வ.வாரியம் கோவை-நீலகிரி வட்டம், கோவை -18 அவர்களின் கடித எண்.4913/கோ.வாடகை/அ2/கோ.நீ.வ, கோவை/2013-2 நாள்.23.05.2014

2.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 20 நாள்.09.06.2014.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72 அவினாசி சாலை மாநகராட்சி வணிக வளாகத்தில் இயங்கி வரும் மேற்பார்வைப் பொறியாளர் த.கு.வ.வாரியம் கோவை-நீலகிரி வட்ட அலுவலகத்தினை நெ.4 வினோபாஜி நகர், விளாங்குறிச்சி ரோடு பீளமேடு கோவை-4-ல் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு சொந்தமான கட்டிடத்திற்கு பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி மாற்றம் செய்ததால் அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாக அலுவலகம் 31.05.2014 பிற்பகல் முதல் காலி செய்து மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

தற்போது காலியாக உள்ள (7526.06 சதுரடி) மேற்படி அலுவலகத்திற்கு பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய காப்புத் தொகை, வைப்புத்தொகை, சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் மேலும் அரசு துறையினருக்கு முன்னுரிமை வழங்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு

தீர்மான எண்.20 நாள்.09.06.2014–ன் படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.5253/2012/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 44 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 43

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.83 மத்திய மண்டலத்திற்குட்பட்ட தியாகி குமரன் மார்க்கெட் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண்.P.186-க்கு வாடகை செலுத்தாத காரணத்தால் 05.02.2014- அன்று மாநகராட்சியால் பூட்டப்பட்டது. - மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஏலத்தில் சேர்க்கப்பட்டமைக்கு பின்னேற்ப்பு - தொடர்பாக

பார்வை-
1. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.13.02.2014
2. மாமன்ற தீர்மான எண்.19 நாளஅ.08.07.2011
3. வரிவிதிப்பு மற்றம் நிதிக்குழு தீர்மான எண்.21 நாள்.09.06.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.83 மத்திய மண்டலத்திற்குட்பட்ட தியாகி குமரன் மார்க்கெட் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண்.P.186-க்கு வாடகை நிலுவை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்புகள் வாயிலாகவும் நேரிலும் பலமுறை நினைவூட்டப்பட்டும் நிலுவைத் தொகை ஏதும் செலுத்தப்படாததால் மாநகராட்சியால் 05.02.2014 அன்று பூட்டப்பட்டு பார்வை 1-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவு படி மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஏலத்தில் சேர்க்கப்பட்டது.

திரு. எம்.அப்பாஸ் அவர்களுக்கு பார்வை-2ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.19, 08.07.2011-ன்படி, உதவி ஆணையாளர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க. எண்.1956/2010/அ1(தெ) நாள்.16.09.2011-ன் மாதவாடகை ரூ.9100/-என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி உரிமதாரர் திரு. எம்.அப்பாஸ் அவர்கள் கடை எண். P.186-க்கு (உரிம எண்.8330058) 16.09.2011 முதல் வாடகை நிலுவை ரூ.2,59,350/-, அபாரத வட்டி மற்றும் சேவை வரி செலுத்தாமல் உள்ளார் .

| | |
|---|---|
| 2011 செப்டம்பர் 16-ம் தேதி முதல் 31.01.2014 வரை வாடகை நிலுவை (செப்டம்பர் மாதம் ரூ.4550/- மற்றும் அக்டோபர் மாதம் முதல் 9100 x 28 மாதம் வரை) | - ரூ.2,59,350/- |
| | ரூ.2,59,350/- |

மாமன்ற தீர்மான எண்.351 நாள்.31.01.2013-ன்படி மாநகராட்சி வணிக வளாக கடைகளுக்கு ஆறு மாதங்களுக்கு மேல் தொடர்ந்து வாடகை தொகை செலுத்தாத கடைகளின் உரிமைத்தை ரத்து செய்து மாநகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பொது மின் ஏலம் கொண்டுவரவும் அக்கடைகளுக்கு செலுத்தியுள்ள வைப்பு தொகைகளை மாநகராட்சி நிதியில் சேர்க்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே தொடர்ந்து மாநகராட்சிக்கு வாடகை தொகை செலுத்தாமலும் நிதி இழப்பு ஏற்படுத்தியும் வருவதால் திரு. எம்.அப்பாஸ் அவர்களின் பெயரினை மாநகராட்சியில் அனைத்து ஏல இனங்களிலிருந்து நீக்கம் செய்து கருப்பு பட்டியலில் சேர்க்க அனுமதி வேண்டியும் மேலும் மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர விளம்பர கட்டண செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் ஏலத்தில் சேர்க்கப்பட்டமைக்கு பின்னேற்ப்புக்கு வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.21 நாள்.09.06.2014–ன் படி குத்தகைதாரர் பெயரை கருப்புப்பட்டியலில் சேர்த்து, குத்தகைதாரர் செலுத்திய வைப்பு தொகையினை பறிமுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 45 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 44

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் திரு.எஸ்.ராஜேஸ்குமார் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை ரத்து செய்து-பொது ஏல இனத்தில் சேர்த்தல் தொடர்பாக.

பார்வை : 1. .மாமன்ற தீர்மான எண்.33 நாள்.25.04.2013
2.மாமன்ற தீர்மான எண்.340 நாள்.30.12.2013
3.திரு.எஸ்.ராஜேஸ்குமார் அவர்களின் விண்ணப்பம் நாள்.30.04.2014.
3.துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள்.31.03.2014
4.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.8 நாள்.09.06.2014.

-----

பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி திரு.எஸ்.ராஜேஸ்குமார் அவர்களுக்கு காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் 2013-2016 ஆண்டு வரை ஒப்படைக்கப்பட்டது.

பார்வை 2-ல் காணும் மாமன்றத்தின் படி இரண்டாம் ஆண்டுக்கு (2014-2015) புதுப்பித்து ஏலத்தொகை செலுத்த அறிவிப்பு கடிதம் 25.12.2013-ல் வழங்கப்பட்டது.

திரு.எஸ்.ராஜேஸ்குமார் அவர்கள் இரண்டாம் ஆண்டு புதுப்பித்து கொள்ளாததால் இவ்வினத்திற்கு முந்தைய ஏலத்தொகையில் 5சதவீதம் உயர்வு செய்து ஏப்ரல் 2014 –ஒருமாதத்திற்கு மட்டும் நீட்டிப்பு வழங்கப்பட்டது. பார்வை 3-ன் படி நீட்டிப்பு பெற விருப்பமின்மையை தொடர்ந்து இவ்வினம் துறை மூலம் தொடர இயலாததால் பூட்டி வைக்கப்பட்டது.

எனவே மேற்படி குத்தகைதாராருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமத்தை ரத்துசெய்து திரு.எஸ்.ராஜேஸ்குமார் அவர்கள் 201304302905 நாள்.30.04.2015 செலுத்திய ரூ.25,000/- வைப்புத்தொகையை பொது ஏல விதிகளின்படி பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவு வைக்கவும் மேலும் அவருடைய பெயரை கருப்பு பட்டியில் சேர்க்கவும் இவ்வினத்தை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய செய்தித்தாளில் விளம்பர செய்தமைக்கு பின்னேற்பு வேண்டியும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.8, நாள்.09.06.2014–ன் படி 1)ஏலத்திற்கு கொண்டு வர பின்னேற்பு வழங்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. 2)குத்தகைதாரர் செலுத்திய வைப்பு தொகையினை பறிமுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 11939 / 2013 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 46 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 45

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்- வரவினங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளுக்கு மத்திய கலால் துறைக்கு செலத்தப்பட வேண்டிய சேவை வரியினை செலுத்த வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையை மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை
1. ஆணையாளர் , மத்திய கலால் துறை அவர்களின் விளக்கம் அளிக்க கோரிய அறிக்கை நாள் 17.10.2012.
2. ஆணையாளர், நகராட்சி நிர்வாகம் அவர்களது கடிதம் ந.க.எண் 9291/2009/ஆர்.2, நாள் 14.11.2012.
3. சேவை வரி தனியார் ஆலோசகர் அவர்களின் கருத்து நாள் 22.01.2013.
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 24, நாள் :09.06.2014.

--------------

பார்வை (1)-ல் காணும் கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள வரவினங்களில் வரியில்லா இனங்கள் மற்றும் இதர இனங்களில் 2007-08-ம் ஆண்டு முதல் வசூல் செய்யப்பட்டுள்ள தொகைகளுக்கு சேவை வரி செலுத்துமாறும், மேலும் நாளது வரையில் சேவை வரி செலுத்தப்படாததற்கான விளக்கத்தை அளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கணக்கு எண் | இனம் |
|---|---|---|
| 1 | 1025 | விளம்பரக் கட்டணம் |
| 2 | 1085 | பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் கட்டணம் |
| 3 | 1044(C) | குப்பை அகற்றுதல் |
| 4 | 1022 | மார்க்கெட் கட்டணம் |
| 5 | 1026 | பேருந்து நிலையக் கட்டணம் |
| 6 | 1027 | ஆடு அறுவைமனைக் கட்டணம் |
| 7 | 1028 | வாகன நிறுத்த கட்டணம் |
| 8 | 1033 | குத்தகைக்கு விடப்படும் காலியிடங்களின் கட்டணம் |
| 9 | 1036 | வணிக வளாகக் கட்டணம் |
| 10 | 1037 | சமுதாயக் கூடக்கட்டணம் |
| 11 | 1038 | கட்டிட வாடகை |
| 12 | 1039 | கட்டண கழிப்பிடம் |
| 13 | 1040 | பயனிகள் தங்கும் அறை |
| 14 | 1042 | பூங்காக்கள் கட்டணம் |
| 15 | 1066 | இதரப் பிடித்தங்கள் |
| 16 | 1079 | சாலையோர விளம்பரக் கட்டணம் |
| 17 | 1100 | கேபிள் பதிப்புக் கட்டணம் |
| 18 | 1043 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் |
| 19 | 1044 | இதரக் கட்டணம் |

அ. மேற்குறிப்பிட்டள்ள 19 இனங்களில் கீழ் குறிப்பிட்டள்ள வரவினங்களுக்கு 2007-08 முதல் 2011-2012 வரையில் தொகை ஏதும் வசூலிக்கப்படவில்லை.

| வ. எண் | கணக்கு எண் | இனம் |
|---|---|---|
| 1 | 1026 | பேருந்து நிலையக் கட்டணம் |
| 2 | 1027 | ஆடு அறுவைமனைக்கட்டணம் |
| 3 | 1028 | வாகன நிறுத்த கட்டணம் |
| 4 | 1036 | வணிக வளாகக் கட்டணம் |
| 5 | 1038 | கட்டிட வாடகை |
| 6 | 1040 | பயனிகள் தங்கும் அறை |
| 7 | 1079 | சாலையோர விளம்பரக் கட்டணம் |

ஆ.சேவை வரி செலுத்த தேவையில்லாத இனங்கள்

(1) 1066 - இதர பிடித்தங்கள்( இவ்வினத்தில் பணியாளர்களுக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ள ஊதியம் திரும்ப செலுத்தப்பட்டுள்ளது.)

(2)1044 - இதரகட்டணம் (சான்றிதழ் மற்றும் சொத்துவரி புத்தக நகல் போன்ற கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டுள்ளன)

இ. சேவை வரி செலுத்தப்பட வேண்டிய இனங்கள்

(1) 1037- சமுதாயக்கூடக் கட்டணம்

(2) 1033 - மைதானம் கட்டணம்

ஈ. சேவை வரி செலுத்தப்பட வேண்டிய இனங்கள்

| வ. எண் | கணக்கு எண் | இனம் | 2007-08 முதல் 2011-12 வரை வசூலிக்கப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|
| 1 | 1085 | பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் கட்டணம் | - |
| 2 | 1022 | மார்க்கெட் கட்டணம் | - |
| 3 | 1033 | குத்தகைக்கு விடப்படும் காலியிடங்களின் கட்டணம் | - |
| 4 | 1025 | விளம்பரக் கட்டணம் | 1,250 |
| 5 | 1036 | வணிக வளாகக் கட்டணம் | 1,24,027 |
| 6 | 1039 | கட்டணக் கழிப்பிடம் | 11,00,140 |
| 7 | 1043 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் | 88,13,587 |
| 8 | 1042 | பூங்காக்கள் கட்டணம் | - |
| 9 | 1045-7 | குப்பை அகற்றுதல் கட்டணம் | 30,62,227 |
| | | மொத்தம் | 1,31,01,231 |

உ. வரியில்லா இனங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகள்

| வ. எண் | வரிவசூலிக்கப்பட்ட ஆண்டு | தொகை ரூ |
|---|---|---|
| 1. | 2007-2008 | 18,29,867.00 |
| 2. | 2008-2009 | 18,03,489.00 |
| 3. | 2009-2010 | 16,27,370.50 |
| 4. | 2010-2011 | 24,51,968.00 |
| 5. | 2011-2012 | 20,92,923.00 |
| | மொத்தம் | 98,05,617.00 |
| 6. | அரசு கட்டிடங்கள் | 13,79,100.00(-) |
| | நிகரத் தொகை | 84,26,517.00 |

1. மேற்குறிப்பிட்டுள்ளவாறு கிழக்கு மண்டலத்தில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளில் சேவை வரி செலுத்துவதிலிருந்து விலக்க பெறக்கூடிய இனங்களை கண்டறிந்து அறிக்கை அளிக்க சேவை வரி தனியார் ஆலோசகர் (Consultant) அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. சேவை வரி தனியார் ஆலோசகர் (Consultant) தனது 22.01.2012 –ம் தேதிய கடிதத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு மட்டும் சேவை வரி செலுத்தப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துள்ளார்.

    1. வணிக வளாகக் கட்டிடங்கள் மற்றும் மீன் மார்க்கெட் கடைகள்
    2. பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்ய அளிக்கும் உரிமம்

எனவே சேவை வரி தனியார் ஆலோசகர் (Consultant) அவர்களின் குறிப்பின்படி கிழக்கு மண்டலத்தில் வணிக வளாகக் கடைகள் மூலம் 2007-2008-ம் ஆண்டு முதல் கணிணி பதிவேடுகளின்படி வசூலிக்கப்பட்ட கீழ் குறிப்பிட்ட தொகைகளுக்கான சேவைவரியினை செலுத்தவும் , மேலும் நகராட்சி நிர்வாக இயக்குனரது கடிதத்தில் தெரிவித்துள்ளபடி வணிக வளாகக் கடைகளின் உரிமைதாரர்களுக்கு சேவை வரி நிலுவைத் தொகைகள் செலுத்துமாறு தனித்தனி அறிவிப்பு வழங்கி இத்தொகையினை வசூல் செய்யவும் , கணினியில் வசூலிக்கப்பட்ட விவரத்தினை சரிபார்த்து பின்னர் சேவை வரி செலுத்த வரிவிதிப்பு மற்றும் மற்றும் நிதிக்குழு தீர்மானஎண் 24, நாள் 09.06.2014-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரையை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்:6686 /2011/கி அ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 47 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 46

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் வணிகவளாக கடைகள் 2014-17-க்கான - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.06.2014-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவிற்கு பொருள் வைப்பது - தொடர்பாக.

பார்வை: 1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.05.06..2014.
2. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.
3. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.12 நாள்.9.6.2014

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2014-17 வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் வணிகவளாக கடைகள் பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 05.06..2014-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு-

ஏலம் நடைபெற்ற தேதி – 05.06..2014
வணிகவளாக கடைகள்

| வ. எண் | வணிகவளாகங்கள் | அரசு நிர்ணயத்தெ தாகை | ஏலதாரா் பெயா் | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மருதமலை அடிவாரம் பகுதியில் 180 சதுரடி அளவுள்ள கடைகள் (கடை எண் 1. முதல் 5 வரை) தனித்தனியாக | | | | | |
| | கடை எண்.3 | 6400 | எஸ்.ரேணுகாதேவி<br>ஏ.தேவராஜன் | 7070 | 6851<br>6800 | 7070 |
| | கடை எண்.5 | 6400 | எஸ்.பாா்வதி | - | 6700 | 6700 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிா்ணயத் தொகை தொகை | ஏலதாரா் பெயா் | 1-வது ஏலம் | 2-வது ஏலம் | 3, 4 & 5 வது ஏலம் | 6-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 2. | வாா்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (10 x 16 =160 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | | |
| | கடை எண்.24 | 9000 | N.மயில்சிங்காரம்<br>A.காசிராமன் | -<br>- | -<br>- | -<br>- | -<br>- | 15500<br>10200 | 15500 |
| | கடை எண்.25 | 9000 | M. அமுதா<br>B.J.பிராகாஷ<br>A. காசிராமன் | -<br>-<br>- | -<br>-<br>- | -<br>-<br>- | -<br>12300<br>- | 15300<br>11400<br>10200 | 15300 |
| | கடை எண்.26 | 9000 | N. மலா்சுகந்தி<br>B.J.பிராகாஷ<br>A. காசிராமன் | -<br>-<br>- | -<br>-<br>- | -<br>-<br>- | -<br>12810<br>- | 15600<br>11500<br>10200 | 15600 |

வணிகவளாக கடைகள்

வரிசை எண். 1-ல் உள்ள இனத்திற்கு 05.06.2014-ம் தேதி நடைபெற்ற 6-வது ஏலத்தில் கடை எண்.3-ற்கு அரசு மதிப்பு ரூ.6400/-ஐ விட உயா்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.7070/-ற்கு திருமதி.S.ரேணுகாதேவி என்பவா் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண். 1-ல் உள்ள இனத்திற்கு 05.06.2014-ம் தேதி நடைபெற்ற 6-வது ஏலத்தில் கடை எண்.5-ற்கு அரசு மதிப்பு ரூ.6400/-ஐ விட உயா்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.6700/-ற்கு திருமதி.S.பாா்வதி என்பவா் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண். 2-ல் உள்ள இனத்திற்கு 05.06.2014-ம தேதி நடைபெற்ற 6-வது ஏலத்தில் கடை எண்.24-ற்கு அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயா்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15500/-ற்கு திரு.N.மயில்சிங்காரம் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண். 2-ல் உள்ள இனத்திற்கு 05.06.2014-ம தேதி நடைபெற்ற 6-வது ஏலத்தில் கடை எண்.25-ற்கு அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயா்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15300/-ற்கு திருமதி.M.அமுதா ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண். 2-ல் உள்ள இனத்திற்கு 05.06.2014-ம தேதி நடைபெற்ற 6-வது ஏலத்தில் கடை எண்.26-ற்கு அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயா்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15600/-ற்கு திருமதி.N.மலா்சுகந்தி ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்படி வணிகவளாகங்களை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண.12 நாள்.09.06.2014-ன்படி உயா்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது. எனவே மான்றத்தின் அனுமதி வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12374 / 2014 / A1(w)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 48 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

------------------------------------------------------------

## பொருள் எண் 47

பொருள்: கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் வணிகவளாக கடைகள் 2014-17-க்கான - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.03.2014-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது - தொடா்பாக.

பார்வை: 1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.05.03.2014.
2. ஆணையாளா் அவா்களின் உத்தரவு நாள். 28.05.2014
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.03 நாள்.9.6.2014

*****

கோயம்புத்தூா் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2014-17 வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் வணிகவளாக கடைகள் பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 05.03.2014-ம் தேதியன்று நடைபெற்றது. பார்வை -2ல் காணும் ஆணையாளா் அவா்களின் உத்தரவின்படி 05.03.2014 பாரளுமன்ற தோ்தல் அறிவிப்பு வெளியாகி உள்ளதால் 05.03.2014 மாலை ஏலம் நடத்த முடியாத நிலையில் இருந்தது. எனவே அனைத்து கவா்களும் துணை ஆணையா் அவா்களின் பாதுகாப்பில் ஒப்படை செய்யப்பட்டது. மேற்படி ஏலம் 21.05.2013-ல் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது. இதில் உயா்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 21.05.2014
வணிகவளாக கடைகள்

| வ. எண் | வணிகவளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை | ஏலதாரா் பெயா் | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மருதமலை அடிவாரம் பகுதியில் 180 சதுரடி அளவுள்ள கடைகள் (கடை எண் 1. முதல் 5 வரை) தனித்தனியாக | | | | | |
| | கடை எண்.4 | 6400 | ரவி | - | 6700 | 6700 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிா்ணயத் தொகை தொகை | ஏலதாரா் பெயா் | 1-வது ஏலம் | 2-வது ஏலம் | 3, 4 & 5 வது ஏலம் | 6-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 2. | வாா்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் தெற்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (கடை எண். 1-7, 11-20, 22-36) (10 x 16 =160 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | | |
| | கடை எண்.19 | 9000 | J.U.இளங்கோ<br>மயில்சிங்காரம் | -<br>- | -<br>- | -<br>- | -<br>- | 13000<br>11789 | 13000 |

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 21.05.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.4-ற்கு அரசு மதிப்பு ரூ.6400/-ஐ விட உயா்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.6700/-ற்கு திரு.ரவி என்பவா் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண். 2-ல் உள்ள இனத்திற்கு 21.05.2014-ம் தேதி நடைபெற்ற 6-வது ஏலத்தில் கடை எண்.19-ற்கு அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.13,000/-ற்கு திரு.J.U.இளங்கோ என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்படி வணிகவளாகங்களை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமார்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண.03 நாள்.09.06.2014-ன்படி உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12374 / 2014 / A1(w)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 49 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 48

பொருள்- வருவாய் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.22, அண்ணா மார்க்கெட் கழிப்பிடம் - பொதுமின்ஏலம் விடுதல் - தொடர்பாக.

பார்வை - 1. மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மார்க்கெட் அனைத்து வியாபாரிகள் பொதுநலச்சங்கம் அவர்களின் கடித நாள்.14.5.2014

2. இளம் பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள்.6.6. 2014.

3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.25 /9.06.2014

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.22, அண்ணா தினசரி மார்க்கெட் பகுதியில் 687 சதுரடி அளவுள்ள கழிப்பிடம் மாநகராட்சி மூலம் கட்டப்பட்டுள்ளது. அதில் 8 ஆண்கள் கழிப்பிடம், 3 பெண்கள் கழிப்பிடம், 3 ஆண்கள் சிறுநீர் கழிப்பிடம் (Urinals), 2 பெண்கள் (Urinals), 1 பெண்கள் குளியலறை, 1 ஆண்கள் பொதுக்குளியலறையுடன் உள்ளது என பார்வை 2-ல் காணும் இளம் பொறியாளர் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கீழ்க்கண்டவாறு வைப்புத்தொகை நிர்ணயம் செய்யலாம். பொதுப்பணித்துறையின் ஒரு சதுரடி மதிப்பு ரூ.63.40/- (687 x 63.40 = 43555.80 x 12 மதத்திற்கு = <u>ரூ.5,22,670/-</u>) ஆகும்.

| வ.எண் | வைப்புத்தொகை | காப்புத்தொகை | வங்கி உறுதிச் சான்றிதழ் (ரூ.) | வங்கி உறுதி சான்றிதழ் பதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | 75000/- | 50000/- | 200000/- | 50000/- |

எனவே மேற்படி அண்ணா தினசரி மார்க்கெட் கழிப்பிடத்தை பொதுஏலம் விடவும், மேற்படி வைப்புத்தொகை, காப்புத்தொகை, வங்கி உறுதிச் சான்றிதழ், வங்கி உறுதி சான்றிதழ் பதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை மற்றும் அரசு மதிப்பு நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமார்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 25 நாள்.09.06.2014-ன்படி மான்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.3394 / 2014 / A1(W)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 50 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 49

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண். 10 மற்றும் 23 மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள கென்வின் நடுநிலை பள்ளி மற்றும் நவீன பேருந்து நிலையம் இரண்டாவது தளத்தில் உள்ள கட்டிடத்தை அரசு அலுவலகங்கள் செயல்பட ஒதுக்கீடு செய்வது – மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டுவது- தொடர்பாக.

பார்வை :
1. துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை அவர்களின் ந.க.எண்.52/2014/எக்ஸ் -1 நாள். 05.02.2014.
2. அலுவல் சாராக்குறிப்பு ந. க.எண். 4642,2011/ எம்.ஏ1 நாள். 11.02.2014
3. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள். 04.03.2014

******

பார்வை 1-ல் காணும் துணை இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத் துறை அவர்களின் கடிதத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பழைய கட்டிடங்களை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டி ஒதுக்கீடு செய்யும் வரை தற்காலிகமாக மாநகராட்சி கட்டிடத்தில் சுமார் 1000 சதுரடி இடம் ஒதுக்கீடு செய்து தரும்படி கோரியுள்ளதை தொடர்ந்து துணை ஆணையர் அவர்களின் குறிப்பில் கெல்வின் நடுநிலைப் பள்ளியில் இரண்டு அறைகள் ஒதுக்கீடு செய்து தர குறிப்பி பெறப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 2-ல் காணும் அலுவல்சாராக் குறிப்பில் வார்டு எண். 10, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள நவீன பேருந்து நிலையத்தில் இரண்டாவது தளத்தில் உள்ள கட்டிடத்தை சிறுசேமிப்பு துறைக்கு செயல்படவும் மற்றும் வார்டு எண். 23-ல் உள்ள கெல்வின் நடுநிலை பள்ளியை துணை இயக்குநர், சமூகநலத் துறைக்கு ஒதுக்கீடு செய்து தரவும் குறிப்பு பெறப்பட்டுள்ளது.

வார்டு எண்.10, மேட்டுப்பாளையம் சாலை நவீன பேருந்து நிலையம் இரண்டாவது தளத்தில் உள்ள கட்டிடத்திற்கு பொதுபணித் துறை வாடகை மதிப்பு ஒரு சதுரடிக்கு ரூ.22.06/- வீதம் தலா 1000 சதுரடிக்கு மாதந்திர வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்து சிறுசேமிப்பு துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்கு வழங்கவும்,

வார்டு எண். 23 கெல்வின் பள்ளியில் உள்ள இரண்டு கட்டிடத்திற்கு கிழப்புறம் உள்ள அறை 322 சதுரடி, மேல்புறம் உள்ள அறை 528 சதுரடி மொத்தம் 850 சதுரடிக்கு பொதுபணித் துறை வாடகை மதிப்பு ஒரு சதுரடிக்கு ரூ.71.78 வீதம் மொத்தம் 850 சதுரடிக்கு ரூ.61,200/- மாதந்திர வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்து சமூக நலத்துறைக்கு அலுவலகம் செயல்பட வணக்கதிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று பின்னேற்றப்பிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1189/2014/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 51 நாள் 11.06.2014</u>**

வார்டு எண்.10 மேட்டுப்பாளையம் சாலை நவீன பேருந்து நிலைய இரண்டாவது தளத்தில் உள்ள கட்டிடத்தில் அலுவலகம் வாடகைக்கு ஒதுக்கீடு பெறும் ஒவ்வொரு துறைக்கும் தலா **ரூ. 10,000/-** மாத வாடகையாக நிர்ணயம் செய்தும், வார்டு எண். 23 கெல்வின் பள்ளியில் உள்ள கட்டிடத்திற்கு மாத வாடகை **ரூ. 20,000/-** என நிர்ணயம் செய்தும் தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 50

பொருள் : கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 40 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடுவது - தொடர்பாக.

பார்வை: உதவி பொறியாளர் குறிப்பு நாள் 06.06.2014.

*********

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 40ல் ஆவாரம்பாளையம் பட்டாளம்மன் கோவில் வீதியில் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் புதிதாக 1800 ச.அடி பரப்பளவு கொண்ட சமுதாயக்கூடம் கட்டப்பட்டு பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டில் நாளொன்றுக்கு வாடகையாக ரூ.2008/- நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாக பொறியாளரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொது பணி துறை மதிப்பின் அடிப்படையில் நாளென்றுக்கு ரூ.2008/- வீதம் வாடகையாக நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 18 நாள் 09.06.2014 ல் மேற்படி சமுதாய கூடத்திற்கு நாளொன்றுக்கு ரூ.1000 வாடகையாக நிர்ணயம் செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருளின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 1780/2012/ ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 52 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 51

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 28 சரவணம்பட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு ஐந்தாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 28ல் சரவணம்பட்டி பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடை எண் 3, 4, 5 ஆகிய மூன்று கடைகளுக்கு ஐந்தாவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.03.2014ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 5 க்கு மட்டும் கீழ் குறிப்பிட்டுள்ள நபர்கள் மட்டும் ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர் மீதமுள்ள கடைகளுக்கு ஒருவரும் ஏலத் தொகை செலுத்தவில்லை.

மேற்படி 05.03.2014 ம் தேதியில் நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டதால் அன்றைய தினம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் பூட்டி சீல் வைக்கப்பட்டது. தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவடைந்ததை தொடர்ந்து மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் 21.05.2014 ம் தேதியில் திறக்கப்பட்டது இதில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

கடை எண் 5 (அரசு மதிப்பு ரூ.12000/- கடையின் அளவு 20 X 11)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 20.02.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை | 05.03.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமதி.அனிதா | ரூ.23400/- | ரூ.30690/- |
| 2 | திரு.எஸ்.நாகராஜ் | ரூ.27001/- | ரூ.29600/- |

மேற்படி கடைக்கு திருமதி.அனிதா என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.30690/-க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார். மேற்படி ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 4 நாள் 09.06.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 53 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 52

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 28 சரவணம்பட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு ஆறாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 28ல் சரவணம்பட்டி பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடை எண் 3, 4, ஆகிய இரண்டு கடைகளுக்கு ஆறாவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.06.2014ம் தேதியில் நடைபெற்றது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ள நபர்கள் ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். இதில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

கடை எண் 3 (அரசு மதிப்பு ரூ.12000/- கடையின் அளவு 20 X 11)

| வ.எண் | ஏலதாரா் பெயா் | 10.01.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை | 05.06.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமதி.அனிதா | ரூ.12600/- | ரூ.13050/- |

மேற்படி கடைக்கு திருமதி.அனிதா என்பவா் மட்டும் அரசு மதிப்பினை காட்டிலும் உயா்ந்தபட்சமாக ரூ.13050/-க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளாா்.

கடை எண் 4 (அரசு மதிப்பு ரூ.12000/- கடையின் அளவு 20 X 11)

| வ.எண் | ஏலதாரா் பெயா் | 10.01.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை | 05.06.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமதி.அனிதா | - | ரூ.8100/- |

மேற்படி கடைக்கு திருமதி.அனிதா என்பவா் மட்டும் மாதம் ஒன்றுக்கு ரூ.8100/-க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளாா். மேற்படி கடையானது கடை எண் 5 க்கு பின்புறமாக உள்ளதாலும் இக்கடைக்கு இதுவரை நடந்த ஏலங்களில் ஒருவரும் ஏலம் கோரவில்லை. எனவே தற்பொழுது பெறப்பட்டுள்ள ஏலக் கோரிக்கையினை ஏற்று கடை எண் 3 மற்றும் 4 ஆகியவற்றை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண் 5 நாள் 09.06.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீா்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 54 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 53

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 31 சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடா்பாக

********

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 31ல் சரவணம்பட்டி விளாங்குறிச்சிரோடு வணிக வளாகத்தில் கடை எண் 2, 4 மற்றும் 5 னை உரிமம் பெற்றவா்கள் மேற்படி கடைகான வாடகை தொகையினை உரிமம் பெற்ற நாள் முதல் செலுத்தப்படாமல் நிலுவை வைத்திருந்த காரணத்தினால் மேற்படி கடைகளை மாநகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. இக்கடைகளுக்கு மூன்றாவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.03.2014ம் தேதியில் நடைபெற்றது. இதில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

கடை எண் 2 (அரசு மதிப்பு ரூ. 9000/- கடையின் அளவு 183 ச.அடி )

| வ.எண் | ஏலதாரா் பெயா் | 05.03.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை | 05.06.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமதி.ராஜேஸ்வரி | ரூ.4167/- | ரூ.5000/- |
| 2 | திருமதி.ஆா்.உமா | - | ரூ.7200/- |

கடை எண் 4 (அரசு மதிப்பு ரூ.9500/- கடையின் அளவு 183 ச.அடி )

| வ.எண் | ஏலதாரா் பெயா் | 05.03.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை | 05.06.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமதி.ராஜேஸ்வரி | ரூ.4326/- | ரூ.5005/- |
| 2 | திருமதி.ஆா்.உமா | - | ரூ.7200/- |

மேற்படி மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் அரசு மதிப்பினை காட்டிலும் குறைவாகவே ஏலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி அரசு மதிப்பானது முன்னதாக கடைகளின் உரிமம் பெற்றவா்களின் ஏலக் கோரிக்கையின் அடிப்படையில் நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகைகளை உரிமம் பெற்றவா்களால் செலுத்தப்படாமல் நிலுவை வைத்திருந்த காரணத்தால் கடைகளை பூட்டி மாநகராட்சி வசம் பெறுப்பேற்று ஏலம் விடப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சி பொறியாளரால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ.4000/- னை காட்டிலும் கடை எண் 2 மற்றும் 4 ன் ஏலக் கோரிக்கை மாதம் ஒன்றுக்கு ரூ.7200/- என்பது கூடுலதாக உள்ளதால் இக்கடைகளின் ஏலக் கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 6 நாள் 09.06.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 55 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 54

பொருள்:- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வ.உ.சி உயிரியல் பூங்கா- தனியார் மூலம் தத்தெடுத்து பராமரித்தல் - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அமைந்துள்ள வ.உ.சி. உயிரியல் பூங்காவில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.33.00 லட்சம் செலவினம் ஏற்பட்டு வருகிறது. எனவே மைசூரில் அமைந்துள்ள உயிரியல் பூங்காவில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகளை தனியார் மூலம் தத்தெடுத்து பராமரிப்பு செய்வதைப்போல வ.உ.சி உயிரியல் பூங்காவில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகளையும், மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள மற்ற விலங்குகளையும் தனியார் மூலம் தத்தெடுத்து பராமரிப்பு செய்வது குறித்து சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண் 40 நாள் 09.06.2014-ன் படி ஒப்புதல் அளித்துள்ளதைத்தொடர்ந்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 27581/2008/எம்.இ.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 56 நாள் 11.06.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 55

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு சிப்பப்பணிகளில் சிப்பம்-2 ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான **14** எண்ணிக்கையிலான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் லாரிகள் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ. 280.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது,

மேற்படி பணிக்கு நான்காம் அழைப்பாக கடந்த 28-02-2014 ல் இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்தனர்.

1) திரு. வைஸ்ணவி மோட்டார்ஸ், சென்னை
2) திரு. என்சோல் மல்டி கிளீன் எக்யூப்மெண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை

மேலே படிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கடந்த 12-03-2014 அன்று கூடி விவாதித்து மேற்படி இரண்டு நிறுவனங்களில் திரு. வைஸ்ணவி மோட்டார்ஸ், சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளி மட்டும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும், அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை 21-05-2014-ல் திறக்கலாமென பரிந்துரை செய்தமைக்கு ஆணையர் அவர்கள் 19-05-2014 அன்று அனுமதி வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 21-05-2014 அன்று திறக்கப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளி கொடுத்தனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாயில்) | ஒப்பந்ததாரரின் விலை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | திரு. வைஸ்ணவி மோட்டார்ஸ், சென்னை | 2,80,00,000 | **2,99,88,000** |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் திரு. வைஸ்ணவி மோட்டார்ஸ், சென்னை நிறுவனம் ரூ. 2,99,88,000/-க்கு மதிப்பீட்டைவிட 7.1% அதிகமாக கொடுத்திருந்தனர். இவ்வொப்பந்தப்புள்ளயை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 21-05-2014 அன்று கூடி விவாதித்து விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்தனர். இதனைத்தொடர்ந்து விலை குறைப்பு கேட்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மேற்படி நிறுவனம் விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனர்.

| வ. எண் | இவ்வலுவலக கடிதம் நாள் | ஒப்பந்ததாரரின் விலை குறைப்பு செய்த கடித நாள் | விலை குறைப்பு செய்த பின் தொகை ரூ | சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | 21.05.2014 | 21.05.2014 | 29688000.00 | (+) 6.03% |
| 2. | 22.5.2014 | 22.05.2014 | 29395000.00 | (+) 4.98% |
| 3. | 22.05.2014 | 03.06.2014 | 29316000.00 | (+) 4.70% |
| 4. | 04.06.2014 | 04.06.2014 | 28840000.00 | (+) 3.00% |

மேற்படி நிறுவனம் இறுதியாக அவர்களது 04-06-2014 தேதியிட்ட கடிதத்தில் அவர்களது ஒப்பந்தப்புள்ளி விலையினை இறுதியாக ரூ.2,93,16,000/- லிருந்து ரூ.2,88,40,000/-க்கு விலை குறைப்பு செய்ததைத் இதனைத்தொடர்ந்து விலை குறைப்பிற்குப் பின்னர் மேற்கூறிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 3% அதிகமாகும். விலை குறைப்பிற்குப் பின்னர் தி/ள். வைஸ்ணவி மோட்டார்ஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 06-06-2014 அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி அவசர அவசியம் கருதிகுறிப்பிட்ட காலக்கெடுவிற்குள முடிக்கவேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை சேவைப் பணிகள் திறன்பட செய்ய வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இருக்காதெனவும் கருத்துரை வழங்கியதுடன் தி/ள். வைஸ்ணவி மோட்டார்ஸ், சென்னை நிறுவனத்தார் ரூ.2,88,40,000/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னா 3% அதிகம்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைக் காட்டிலும் (கூடுதலாகவுள்ளதால் மாமன்றத்தின் அனுமதி பெற்று மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாமெனவும், மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதலாக ஏற்படும் தொகையினை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் பரிந்துரை செய்துள்ளது.

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சிப்பம்-2-ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 14 எண்ணிக்கையிலான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் லாரிகள் கொள்முதல் செய்யும் பணிக்கு தி/ள். வைஸ்ணவி மோட்டார்ஸ், சென்னை நிறுவனத்தார் ரூ.2,88,40,000/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர் 3 % அதிகம்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதலாக ஏற்படும் தொகையினை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். 3395/2012/ எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 57 நாள் 11.06.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**மேயர் (பொறுப்பு)**
கோயம்புத்தூர் மாநகராட்சி